
செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



..ரசு..

..லம்பு-௫ச] வள்ளுவர் ஆண்டு-௨௦௧௦ ஆவணி, Sep. '79 [பரல்-க.

‘செந்தமிழ்ச் செல்வி’

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

‘செந்தமிழ்ச் செல்வி”

ஆண்டுக் கையொப்பம்

(Subscription Rates)

உள்நாடு ரூ. 12 00 வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

Vol. LIV (௫௪) 1979—80

66-3



செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

ஐம்பத்துநான்காவது சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு
உ௦௧௦—உ௦௧௧

The South India Saiva Siddhanta Works
 Publishing Society, Tinnevelly, Ltd.,
Madras-1 Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1,
Kumbakonam-1. Tiruchirappalli-2.

உள்ளுறை

படங்கள்

———

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௰௧௦, ஆவணி செப்டம்பர் 1979	பரல் க

செல்வியின் ஐம்பத்து நான்காவது யாண்டு

கடந்த ஐம்பத்து மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு வரலாற்றுப் பேரேடுகளில் தன் சீரிய முத்திரையைச் சிறப்புறப் பதித்துவந்துள்ள செந்தமிழ்ச்செல்வி ஐம்பத்து நான்காவது யாண்டு அருந்தமிழ்ப் பணியைப்புதுமைப் பொலிவொடும் தொடங்குகின்றது. தொன்மைச் சிவநெறியையும் செந்தமிழையும் பேணி வளர்த்தலையே அரும்பெரும் நோக்கமாகக் கொண்டு 1923இல் தொடங்கப்பெற்ற செல்வி, மறைத்திரு மறைமலையடிகளார் வழியைப் பின்பற்றி இது காறும் தமிழ்மொழி, தமிழர் சமயம், இனம், நாடு, இலக்கண இலக்கியங்கள், மொழியியல், வரலாறு முதலிய பற்பல துறைகளிலும் செய்துள்ள பணிகள் அளவிடற்பாலனவல்ல. தனித்தமிழ் வளர்ச்சிக்கும், புதுமுறை ஆக்கப்பணிகளுக்கும், இந்தியின் வல்லாண்மையை எதிர்த்து வீழ்த்துதற்கும் செல்வி செய்துள்ள பணிகள் ஏராளம். எல்லைப் பாதுகாப்பிலும், மற்றும் சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் இன்ன பிறவற்றுக்கும் அவ்வப்போது நேரும் ஊறுபாடுகளைப் போக்குதலிலும் செல்வி ஒல்லும் வகையாலெல்லாம் உறுபணி செய்துள்ளது.

தமிழ் எழுச்சியும் வளர்ச்சியும் வலிவு பெறாத காலச்சூழலில் தொடங்கப்பட்ட செல்வி எத்தனையோ இழப்புகளுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் இடையேயும் தன் பணியைத் தடைப்படாது செய்து வருகின்றது. செல்வியின் தொடக்கத்திற்கு முன்னும் பின்னும் தோன்றிய எத்தனையோ இதழ்கள் மங்கி மறைந்துவிட்டன; சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பினாலேயே செல்வி

தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஆனாலும் செல்வியின் கையொப்பக்காரர் - உறுப்பினர் தொகை வளரவில்லை நூல் நிலையங்கள் கல்விக் கூடங்களின் எண்ணிக்கையும் படித்தவர் தொகையும், தமிழாசிரியர்கள் எண்ணிக்கையும், அவர்தம் வருவாயும் நாளுக்கு நாள் ஒரு புறம் பெருகிக்கொண்டிருக்கின்றன. அந்தோ! மறுபுறம் செல்வியும் செல்வி போலும் இதழ்களும் செழிப்புற வளராதது மட்டுமன்றி நாளுக்கு நாள் நலிந்து தளர்வதும், பொழுதுபோக்கு நூல்கள் வெளியிடப் பெறுவதும், புல்லிய உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற புறக்கவர்ச்சி இழிதகை இதழ்களும் போட்டியிட்டுக்கொண்டு பன்னூருயிரக் கணக்கில் மலிந்து வளர்வதும், தமிழர் ஒவ்வொருவரும் வருந்தத்தக்கனவாகும். இந்நிலையை மாற்றத் தமிழுணர்வாளர் அனைவரும் உறுதியெடுத்துக் கொள்ளுதல் வேண்டும்!

செல்வியின் தொகுதிகள் யாவும் செந்தமிழ்க் களஞ்சியங்களாக விளங்குகின்றன; கடந்த அரை நூற்றுண்டுக் காலத்திற்கு மேலாகத் தமிழ்நாட்டில் நிகழ்ந்த சிறப்புறு நிகழ்ச்சிகளை யெல்லாம் குறிப்பாகத் தாங்கி நின்று ஆராய்ச்சியாளர்க்கு அரிய நற்றுணையாகத் திகழ்கின்றன. இவற்றின் சிறப்பை நம்மவர்கள் நன்குணர்ந்து பயன் கொள்ளவில்லை. ஆயினும், ஆராய்ச்சியுணர்வுமிக்க அயல்நாட்டு அறிஞர் பெருமக்கள் இவற்றைப் பயன் கொள்வதில் நாட்டமுடையராய் இருப்பது மனநிறைவைத் தருகின்றது. அமெரிக்க அறிஞர்கள் சிலர் மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு வருகை தந்து செல்வியின் தொகுதிகள் யாவற்றையும் படப்பதிவு (Photo Print) செய்து வருகின்றனர். இந்நிலையை யுணர்ந்தாயினும் நம் தமிழ்ப் பெருமக்கள் செல்வியைப் புரப்பதிலும் வளர்ப்பதிலும் நாட்டஞ் செலுத்துவார்களென நம்புகின்ரேம்.

தமிழ்நாட்டின் அனைத்து நூல் நிலையங்களிலும், கல்விக் கூடங்களிலும், சமய நிலையங்களிலும், பொதுப்பணி நிறுவனங்களிலும் செல்வி இடம் பெறுதல் வேண்டும். அரசினரும், கல்வி நிலைய, சமய நிலையப் பொறுப்பாளர்களும் அருந்தமிழ் ஆர்வலர்களும் ஆவன செய்யுமாறு வேண்டுகின்ரேம்.

———

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு! அடிப்படை எவர்பட்ட அரும்பாடு?

[ஞா. தேவநேயன்]

''வையம் ஈன்றதொல் மக்கள் உளத்தினைக்
கையி னாலுரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்.''

உலகமுதல் உயர்தனிச் செம்மொழியும் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான குமரித்தமிழ் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன் என்னும் அழக மதியார், இதுவரை இத்தகைய மாநாடு இம் மாநிலத்தில் எம் மொழிக்கும் எங்கும் நடந்ததேயில்லை யென்று எவரும் வியக்கு மாறு, அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் மாடமதுரையில் மாபெருஞ் சிறப்பாக நடத்த விருக்கும் உலகத்தமிழ் மாநாட்டால், மாட்சிமைப் பட விருப்பது மட்டில்லா மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியே.

ஆயினும், மூவாயிரம் ஆண்டாக வரலாறு முற்றும் மறை யுண்டும், அடிப்படை முதனூலனைத்தும் வாரிகளாலும் ஆரிய ராலும் அழியுண்டும், வழிபாட்டிற்குத் தகா மொழியெனத் தள்ளுண்டும், இழிந்தோன் மொழியெனப் பழியுண்டும், வரவரச் சொல் வழக்கொழிந்து வறுமையுண்டும், தலைமைப் புலவர்க்கும் கழக (சங்க) நூல் தெரியாது கரவுண்டும், ஐயெழுத்து மொழி யென்றும் ஆரிய வழிமொழியென்றும் வையாபுரிகளால் வசை யுண்டும், இரங்கத்தக்க நிலையிற்கிடந்த இம் மொழி, இன்று இத்தகைய பெருமையை மீண்டும் பெறுதற்குத் தக்க காரணங்கள் இருத்தல் வேண்டும்.

கடைக் கழகக்காலத்தில், பிராமணன் நிலத்தேவன் என்றும், அவன் முன்னோர் மொழியுடன் வடநாட்டுப் பிராகிருதங் கலந்த வேதமொழியும், அதனொடு தமிழ் கலந்த சமற்கிருதம் என்னும் உலகியல் இலக்கிய மொழியும், தேவமொழியென்றும், இரு நச்சுக் கருத்துக்கள் மூவேந்தர் உள்ளத்திற் பசுமரத்தாணிபோற் பதிக்கப் பட்டு, ஆரியம் தமிழகத்தில் வேரூன்றியிருந்தபோதே, நக்கீரர் என்னும் வேளாளப் பிராமணர் ''ஆரியம் நன்று; தமிழ் தீது'' என வுரைத்த குயக்கொண்டானைச் சாவித்தும் உயிர்ப்பித்தும், தென் மொழியே தேவமொழியென்று வலியுறுத்தினர்.

கி. பி. 6ஆம் நூற்றுண்டிற்கும் 9ஆம் நூற்றுண்டிற்கும் இடையில், தேவாரமூவரும் மாணிக்கவாசகரும் பன்னிராழ்வாரும் திருப் பாடல்களால் தமிழின் தெய்வத்தன்மையை நிலைநாட்டினர்.

19ஆம் நூற்றாண்டில், ஆறுமுக நாவலர் தில்லையிலும் யாழ்ப் பாணத்திலும் கல்லூரிகள் நிறுவியும்; சென்னையில் ஓர் அச்சகம் அமைத்துப் பரிமேலழகருரை, திருக்கோவையுரை, நன்னூற் காண்டிகை, தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் முதலிய சிறந்த நூல்களை அச்சிட்டும்; பெரிய புராணம், திருவிளை யாடற் புராணம் முதலிய சிறந்த தொன்மங்கட்கு உரைநடை வரைந்தும்; சிறுவர்க்கேற்ற பாடப்பொத்தகங்கள் இயற்றியும், இலங்கையிலும் தமிழகத்திலும் தமிழுக்கும் சிவநெறிக்கும் சிறந்த தொண்டாற்றினர்.

கால்டுவெல் மேற்காணியார் தம் திரவிட ஒப்பியல் இலக்கணத் தினாலும், போப்பையர் திருக்குறள் நாலடியார் திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பினாலும், தமிழின் பெருமையை ஒல்லும் வகையில் உலகறியச் செய்தனர்.

இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில், பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத்தேவர், 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' நிறுவியும், அரிய கட்டுரைகளைக் கொண்ட 'செந்தமிழ்' என்னும் மாதிகை நடாத் தியும், முந்நிலைப் பண்டிதத் தேர்வுகட்குரிய பாடச்சாலை யேற் படுத்தியும், ஓர் அச்சகம் அமைத்து எழுபது அரிய நூல்களை வெளி யிட்டு விற்பனை செய்தும், நல்ல தமிழ்த்தொண்டு செய்தார். அச் சங்கத்தில் தலைமையாயிருந்த பிராமணப் புலவரின் வடமொழிப் பற்றினால் நேர்ந்த சில தீங்குகள், பாண்டித்துரைத்தேவரையும் அவர் பின்னோரையும் கடுகளவுஞ் சாரா.

1912ஆம் ஆண்டில், தஞ்சைத் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்தும், தமிழ்ப்பொழில் என்னும் மாதிகை நடாத்தியும், தமிழ்ப் புலவர் கல்லூரி நிறுவியும், சில சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டும், 1925 முதல் தமிழ்ப் பொழில் என்னும் திங்களிதழைத் தொடர்ந்து வெளியிட்டும் இயன்ற வரை தமிழ்த் தூய்மை போற்றியும், இந்தித் திணிப்பை வன்மையா யெதிர்த்தும், சிறந்த தமிழ்ப்பணி யாற்றினார். அவர் தொடங்கிய நற்பணிகள் இன்றும் தொடர்ந்து வருகின்றன.

சி. வை. தாமோதரம் பிள்ளையும் பவானந்தம் பிள்ளையும் சிற்சில அரும்பெரு நூல்களை வெளியிட்டனர்.

பெரும் பேராசிரியர் தென்கலைச் செல்வர் பண்டாரகர் உ. வே. சாமி நாதையர் நூற்பதிப்புத் துறையிற் பெரும்பெயர் பெற்ற மறக் கொணாத் தனிப்பெரும் புலவராவர். பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுள் ஐந்தும், பெருவனப்பு (பெருங்காவியம்) நான்கும், பனுவல்கள் (பிரபந்தங்கள்), தொன்மங்கள் (புராணங்கள்),

இலக்கண நூல்கள், கட்டுரைத் தொகுதிகள், வாழ்க்கை வரலாறுகள் முதலியன பற்பலவும், பெரும் புலவர்க்கும் பயன்படும் அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அவரால் வெளியிடப் பட்டுள்ளன. உரைநடைப் பொத்தகங்களெல்லாம் அவராலேயே எழுதப்பெற்றவை.

சுந்தரம் பிள்ளை பல நூல்களை இயற்ருவிடினும் அல்லது வெளியிடாவிடினும், மனோன்மணீயத் தமிழ்த்தாய் வாழ்த்தினுல், தமிழனை மூவாயிர வாட்டையாரிய அடிமைத்தன அகக்கரண வுறக்கத்தினின்று தட்டியெழுப்பிய பெருமைக்குரியவராவர்.

இந் நூற்றுண்டில் மட்டுமன்றி, இக் கிறித்தவ வூழியிலேயே திருவள்ளுவர்க் கடுத்தபடியாக வைத்தெண்ணப்படத்தக்க தனித் தமிழ்த் தந்தையார் மறைமலையடிகளே. தமிழ் ஆங்கிலம் வடமொழி ஆகிய மும்மொழியுஞ் செம்மையாய்க் கற்று, வரலாறு, நல்வாழ்வியல், சமயம், குலவியல், உணவியல், சீர்திருத்தம், மாந்தன் வசியம், அறிதுயில், தொலைவிலுணர்தல், மறுமைநிலை முதலிய பல்வேறு அறிவியல் துறைகள் பற்றி, முதனூல், உரை, மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி, திறனுய்வு, அங்கதம், மறுப்பு முதலிய பன்முறைகளில்; உரைநடை, செய்யுள் என்னும் இருவகை மொழிநடையிலும், பனுவல், நூல், நாடகம், புதினம், கட்டுரை, கடிதம் முதலிய பல்வகை வடிவிலும், ஐம்பதிற்கு மேற்பட்ட அரும்புலத் தனித் தமிழ்ப் பொத்தகங்களைத் தாமே எழுதி அடுக்கி அச்சிட்டு வெளியிட்டு, தமிழை வடமொழிப் பிணிப்பினின்றும், தமிழனை - ஆரிய அடிமைத்தனத்தினின்றும் மீட்டுப் பல்வகை வாகை சூடிய, தனிப் பெரும்புலவர் மறைமலையடிகள். அவர்போலும் மற்றொருவர் அடுத்த நூற்றுண்டிலும் தோன்றுதலரிது.

மறைமலையடிகளுடன் தனித்தமிழ் மறைந்ததென்று பறையறைவர் வையாபுரிகள். 'மறைமலையடிகளின்' அடியொற்றித் தனித் தமிழை வளர்க்கவும் பரப்பவும், 'உலகத் தமிழ்க் கழகம்' என்னும் பொதுமக்கள் இயக்கம் ஒன்று தமிழரிடைத் தோன்றி வளர்ந்து வருகின்றது. அதன் முதற்காலச் செயலாளராக விருந்த பாவலரேறு பெருஞ்சித்திரனுர், தென்மொழி யென்னும் தனித்தமிழ் மாதிகை நடாத்தியும், ஐயை, மகள் புகுவஞ்சி, நூருசிரியம், உலகியல் நூறு முதலிய தனித்தமிழ்ப் பனுவல்களை வெளியிட்டும் வருகின்ருர். பால் என்பது தனிப்பாலே. தமிழ் என்பது தனித் தமிழே. ''என்றுமுள தென்றமிழ்'' என்ற கம்பர் கூற்றுப்படி, தமிழ் மாந்தனுள்ள காலமெல்லாம் மறையாது நின்று, எல்லையறு பரம்பொருள்போல் முன் குமரிநாட்டிலிருந்தபடியே இனியும் என்றும் தனித்தமிழாகவே யிருக்குமென்று எதிர்காலத் தமிழரால்

வையாபுரிகள் குறும்பியளவாக் குடைந்து தோண்டிச் செவியுறுத்தப்படுவர் என்பது திண்ணம்.

உலகில் தமிழை நிலைநாட்டிய உடன்பிறந்தார்'இருவர்:

திருவள்ளுவர் முதல் மறைமலையடிகள் வரை பெரும்புலவர் எத்துணையர் தோன்றியிருப்பினும், அவரெல்லாரறிவாற்றலையும் தொகுத்து ஓரகத்தே தேக்கி, எண்ணற்றவர் வந்துண்ணினும் வற்ருவாரி போன்றும், எடுக்க எடுக்கக் குறையா உலவாக் கோட்டை போன்றும், நாடெங்கும் வறளினும் கேடறியா மூல பண்டாரம் போன்றும், புலவரெல்லாருங் கூடும் பொது மண்டபம் போன்றும், அறிஞர் கண்டுகளிக்கும் அரும்பொருட் காட்சியகம் போன்றும், ஆராய்ச்சியாளர்க்கெல்லாம் ஐயமுதம் (பஞ்சாமிர்தம்) அளிக்கும் ஆவினன்குடிபோன்றும், குன்ருது உணவு பெருக்குங் கூட்டுப்பண்ணை போன்றும், பகைவரெல்லாங் கூடி முற்றுகை யிடினும் புறங்காட்டுவிக்கும் படைக்கலக் கொட்டில் போன்றும், தமிழ்மொழியிலக்கிய நாகரிக பண்பாட்டைக் காக்கும் தமிழுக்கு ஊறு நேர்வதைத் தடுத்துத் தனிக்காவற்கூடம் போன்றும், விளங்கும் ஒரு நூலகத்தொடு கூடிய தமிழ் நூல் வெளியீட்டு மட்டிட்ட கூட்டுப் பங்குக் கழகத்தைத் 1920 ஆம் ஆண்டில் தோற்றுவித்து வளர்த்து வருபவர், நெல்லைத் திருவரங்கம் பி. ளையும் அவர்க்குப் பின் அவரிளவலான தாமரைத் திருச் செந்தமிழ்ச் செல்வர் வ. சுப்பையாப் பிள்ளையுமே.

திருவரங்கம் பிள்ளை பண்பு:

அமர்ந்த தமிழ நோக்கும் அமைந்த இன் சொல்லும் இயல் பாகக் கொண்டு, தமிழார்வமே வடிவாகத் திரண்டவர் திருவரங்கம் பிள்ளை. அவரது தமிழார்வமாகிய காந்தமே, அவரை மறைமலையடிகளொடும் அவரின் மூத்த மகளார் தனித்தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையம்மையாரொடும், ஒருங்கே இறுகப் பிணித்திணைத்தது. அதனுல், திருமணத்திற்கு முன்பே இலங்கையிற் பன்முறை பணந்தண்டி அடிகட்கனுப்பி, அவர்களது தனித்தமிழ் நூல் வெளியீட்டிற் குதவினர்.

திரு. வ. சுப்பையாப் பிள்ளை பண்பு:

திரு. வ. சுப்பையாப் பிள்ளை அவர்கள், பொது அன்பில் தமையனுரிற் சற்றுக் குன்றியவரேனும், தமிழார்வத்தில் இம்மியுங் குன்றியவரல்லர்; நூல் வெளியீட்டுத் திறனிலும் வணிகத் திறனிலுமோ தமையனுரிலும் பன்மடங்கு விஞ்சியவரே. "மூத்தது மோழை" என்பது தமையனுர்க்குச் சற்றும் பொருந்தாவிடினும்,

"இளையது காளை" என்பது தம்பியார்க்கு முற்றும் பொருந்தும். சிவக்கொண் முடிபு (சைவ சித்தாந்த) நூற்பதிப்புக் கழகமும் மறை மலையடிகள் நூல்நிலையமும், இன்றுள்ள விரிவும் பெருமையும் பெற்றிருப்பதற்குத் திரு. சுப்பையாப் பிள்ளையின் அகப்புறக் கரண வுழைப்பே முற்றுங் காரணம்.

நூல் வெளியீடு :

ஒவ்வொரு தொழிற்கும் ஒவ்வொரு தனித்திறன் உள்ளது. நூல்வெளியீட்டுத் திறனை இயற்கையாகவே முற்றும் பெற்றவர் திரு. வ. சுப்பையாப் பிள்ளை. தமிழ்நூல் வெளியீட்டிற்கென்றே, திரு. வ. சுப்பையாப் பிள்ளை இறைவனுற் படைக்கப்பட்டுள்ளார் என்பதை, கடவுள் நம்பிக்கையுள்ளவர் அனைவரும் ஒப்புக் கொள்வர். வெளியிடவேண்டிய பொருட்டுறைகளைத் திட்டஞ் செய்தலும், ஒவ்வொரு துறையிலும் வல்லுநரைத் தேர்ந்து தெளி தலும், அவரை வரிசையறிந்து போற்றலும், தெளிவாகவும் திருத்த மாகவும் சிக்கனமாகவும் அச்சிட்டுக் கண்கவர்கவின் கட்டடஞ் செய் வித்தலும், தக்க அதிகாரிகளை எளிய முறையில் வயப்படுத்தலும் விற்பனைக்கு வலக்காரமான வழிகளையெல்லாங் கையாடலும் நேர்மை விலைக்கு விற்றலும் ஆகிய வினைகளில், மேலையரும் அவரிடம் வந்து பயிற்சி பெறுமளவு அவர் தேர்ச்சி பெற்றவராவர். இதுகாறும் வெளியிடப்பட்ட பொத்தகங்கள் ஏறத்தாழ ஈராயிரமா யிருக்கலாம். அவற்றுட் சில ஆங்கில நூல்கள்.

'செந்தமிழ்ச் செல்வி' ஒரு தனியிதழ்போல் தோன்றினும், அதுவும் நூல் வெளியீட்டின்பாற்பட்டதே. அதில் வெளிவரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், பெரும்பாலும் நூற்றிறன் வாய்ந் துள்ளமையால், மாதந்தொறும் விலையாகாத இதழ்கள் ஆண்டு வாரியாகக் கட்டடஞ் செய்யப்பட்டுப் பிற பொத்தகங்கள் போன்றே விற்கப்படுகின்றன.

எத்துணையோ நூல்கள் நீண்ட காலமாக அச்சீடின்றி யிருந் தமையால், அவற்றின் பழம்படிகள் பழம்பொத்தகக் கடைகளிற் செல்வரே வாங்கத்தக்க கடுவிலைக்கு விற்கப்பட்டன. 'ஆயிரத் தெண்ணூருட்டை முற்றமிழர்' (Tamils, Thousand and Eight Hundred years ago) என்னும் ஆங்கில நூல் திரு. வ. சுப்பையாப் பிள்ளையால் வெளியிடப்பெற்று 12 உருபாவிற்கு விற்கப்பட்ட போதும், அதை அறியாத ஒரு மேலைச்செல்வர், அதன் பழம்படி யொன்றை, மூர் அங்காடியில் 600 உருபா கொடுத்து வாங்கிச் சென்றார். இதிலிருந்து, திரு. சுப்பையாப் பிள்ளையின் நூற்பதிப்புத் தொண்டின் பெருமையை உணரலாம்.

இதுபோது, தமிழ் நூல்களுட் பெரும்பாலனவற்றை வாங்கக் கூடிய பொத்தக விற்பனை நிலையம் சை. சி. நூ. ப. கழகம் ஒன்றே. பிறர் வெளியீடுகளும் அதன் வாயிலாகப் பெறலாம். ஆகவே, அது இன்று மாக்குமில்லன் (Macmillan & Co), இலாங்மன்சு (Longmans Green & Co.), இகின்பாதம் (Higginbotham) ஆகிய மூன்று ஆங்கிலக் குழும்புகளும் ஒன்றுசேர்ந்ததொக்கும். ஆதலால், ஒப்புயர்வற்ற உலகமாபெரு வெளியீட்டகம் இதுவே.

மறைமலையடிகள் நூல்நிலையம் :

சிவக்கொண்முடிபு (சைவசித்தாந்த) நூற்பதிப்புக் கழகத்தைச் சேர்ந்ததும், பொது மக்கட்கு மிகப் பயன்படுவதும், திரு. வ. சுப்பையாப்பிள்ளையின் பணித் திறமையை விளக்குவதுமான நிறுவனம் 'மறைமலையடிகள் நூல்நிலையம்' ஆகும். இது 35,000 நூல்களே கொண்டதாயினும், பிற நூலகங்களில் இல்லாதனவும் மிகப் பழையனவுமான பல அரிய வெளியீடுகளைக் கொண்டுள்ளது. இவற்றைத் தொகுக்கத் திரு. வ. சுப்பையாப்பிள்ளை 40 ஆண்டு பட்டபாடு கொஞ்சநஞ்சமன்று. சேய்மையிலும் அண்மையிலுமுள்ள உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து, ஆராய்ச்சியாளர் இங்கு வந்து இதனாற் பெரும் பயன் பெற்றுச் செல்கின்றனர்.

தமிழ்ப்பற்று :

வணிக மதி நுட்பம், சூழ்வுத்திறன் முதலியவற்றொடு திரு. வ. சுப்பையாப்பிள்ளைக்கு உள்ள அளவிறந்த தமிழ்ப்பற்று, அவரைத் தமிழ் வெளியீட்டாளருள் தன்னந்தனியராகச் சிறப்பித்துக் காட்டும். அது அவரது சிக்கனத்தையும் மேற்கொள்ளும். அதனாலேயே, விரைந்தும் மிகுதியாகவும் விலையாகாத என் பல்வேறு சொல்லாராய்ச்சி மொழியாராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றை வெளியிடும் வேறு வெளியீட்டாளர் ஒருவருமில்லை. ஆங்கில நூல்களையும் வெளியிடுவதும், கையெழுத்துப் படிகளையும் நல்விலை கொடுத்து வாங்குவதும், ஓய்வு பெற்ற வறுமைப் புலவரை வேலைக் கமர்த்துவதும், இந்தித் திணிப்பை எதிர்ப்பதும், அவரது தமிழ்ப் பற்றையே சிறப்பக்காட்டும்.

எண்வகை வனப்பும் பல்துறை நூலும் உள்ளிட்ட குமரி நாட்டு எழுநிலச் செய்யுளிலக்கியம் அனைத்தும் இருவகையில் அழியுண்டபின், எஞ்சியிருந்த இயற்றமிழிலக்கணத்தின் சார்பு நூலாக வேறெம் மொழியிலும் இல்லாத பொருளிலக்கணங் கூறும் தொல்காப்பியமும், கடவுளை முதன் முதலாகக் கண்ட தமிழர் இம்மைக்குரிய அறம் பொருளின்பத்தொடு மறுமைக்குரிய வீடு பேறும் சேர்த்து வகுத்த நாற்பொருளை, நவில்தொறும் நயம்

தோன்ற முப்பாலில் விளக்கும் திருக்குறளும், இன்றும் தமிழை ஈடிணையற்ற மொழியாக ஏனையவற்றினின்று பிரித்தே காட்டுகின்றன.

ஆயினும், வாள்போற் பகைவரும் கேள்போற் பகைவரும், தமிழை ஒரு சிறப்புமற்ற பன்மொழிக் கலவையான புன்சிறு புது மொழியாகக் காட்டி வருகின்றனர். இதைக் கடந்த அறுபான் ஆண்டாகச் சை. சி. நூ. ப. கழகம் பல்வகையில் எதிர்த்து வருவதைத் தமிழுலகம் நன்கறியும். **இக் கழகம் இன்றேல் தமிழ் இன்று இந்நிலையில் இருந்திராது. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் நடந்திரா.**

'செல்வி' வாசகர்க்கு ஒரு வினு :

'தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள்' என்னுங் கட்டுரைத் தொடர் 50 கட்டுரைகள் கொண்டது. அவற்றுள் 18 மட்டும் வெளிவந்துள்ளன. ஏனைய வேண்டுமா வேண்டாவா என்பதை உடனே இதழாசிரியர்க்குத் தெரிவிக்க.

குறிப்பு :

வரும் சனவரித் திங்களில் மதுரை மாநகரில் தனிப் பெருஞ் சிறப்புடன் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு நடைபெறவிருக்கின்றது. இத்தகைய மாநாடுகள் கூட்டப்படுதற்குரிய அடிப்படைக் கருத்துக்களைப் பரப்பிப் பணியாற்றிய பெருமை, தொன்மைச் சிவநெறியும் தூய தனிச் செந்தமிழும் பேணி வளர்ப்பதற்கென்றே தோன்றி வளர்ந்து அயராது உழைத்துவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு உண்டு. இதனை மொழிநூல் மூதறிஞர் பாவாணர் அவர்கள் இக் கட்டுரையில் நன்கெடுத்து விளக்கியுள்ளார்கள்.

திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, பண்டித சவரிராயர் ஆகியோர் வெளியிட்ட தொல் பழந்தமிழர் (Tamilian Antiquary) என்னும் இதழும், தமிழிலக்கியக் கழகத்தார் முதலில் தூத்துக்குடியிலிருந்தும், பின் சென்னையிலிருந்தும் வெளியிட்ட தமிழர் பண்பாடு (Tamil Culture) என்னும் ஆங்கிலக் காலாண்டு வெளியீடும், அருட்டிரு விபுலாநந்த அடிகள், பண்டித க. பொ. இரத்தினம், அப்பர் தனிநாயகம் ஆகியோரின் அயல்நாட்டுச் செலவும், அவர்தம் பன்னூடு தழுவிய

நன்முயற்சிகளும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று விழைந்த சுப்பிரமணிய பாரதியார் ஈண்டு நினைவு கூர்தற்குரியார். ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் நிறைந்த புலமையும், பாத்திறமும், எழுத்தாற்றலும், பேச்சாற்றலும், சிவநெறியில் மிகுந்த ஈடுபாடுமுடைய திருவாசமணி கே. எம் பாலசுப்பிரமணியம் அவர்கள் திருவாசகத்தையும் திருக்குறளையும் சிறப்புற ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடன்றி, அயல்நாடுகளில் சுற்றுலா மேற்கொண்டு சிவநெறியின் மாண்பினையும் செந்தமிழின் சிறப்பையும் எடுத்து விளக்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று நம் கைக்குக் கிட்டியுள்ள பழைமையான இலக்கணப் பெருநூலான தொல்காப்பியத்தையும், உலகப் பொதுமறையான திருக்குறளையும், அவற்றுக்கு அறிஞர் பெருமக்கள் வரைந்த நுட்பம் வாய்ந்த பற்பல உரைகளையும், பல மொழிபெயர்ப்புக்களையும் கழகம் வெளியிட்டுள்ளது. பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கும் என்னும் கழக நூல்களையும், ஐம்பேரிலக்கியங்கள், ஐஞ்சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றையும், பன்னிரு திருமுறைகள், பதினுன்கு மெய்கண்ட நூல்கள், அருணகிரியார், தாயுமானுர் முதலிய அருளாளர்தம் திருப்பாடல்கள், திருவிளையாடல் புராணம் தணிகைப் புராணம் முதலிய தொன்மங்கள் ஆகிய சமய நூல்கள் அனைத்தையும், திவாகரம், பிங்கலம் முதலிய நிகண்டுகள், பிற்கால இலக்கண நூல்கள் யாவற்றையும் பிற்காலச் சிற்றிலக்கியங்கள் பலவற்றையும் கழகம் பழைய புதிய உரைகளோடும் விளக்கங்களோடும் வெளியிட்டுள்ளது. வரலாறு, மொழியியல், அறிவியல் முதலிய பல்துறை நூல்களையும், நாடகங்கள், அகரமுதலிகள், சொற்பொழிவு நூல்கள் முதலியவற்றையும் கழகம் வெளியிட்டுள்ளது. மொழி பெயர்ப்பாகவும், மூல நூலாகவும் கழகம் வெளியிட்டுள்ள ஆங்கில நூல்களும் பல. சுருங்கச் சொன்னுல் இற்றைத் தமிழ் எழுச்சியும் வளர்ச்சியுமெல்லாம் கழகத்தினுடைய அடிப்படை நன்முயற்சிகளின் விளைவே எனின் மிகையாகாது.

—ஆசிரியர்.

கோயிலா? கோவிலா?

[இரா. இளங்குமரன்]

கோயில் என்பதா? கோவில் என்பதா? இருவகையாலும் சொல்லுகின்றனரே, எழுதுகின்றனரே, கற்றுத்தேர்ந்த அறிஞர்கள் கூட இருவகையாலும் எழுதுகின்றனரே, எது சரியானது?

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்று பள்ளிப் பிள்ளைகளுக்கும் சொல்லிவைத்தார் பாட்டி. கோயில் இல்லா ஊரே தமிழகத்தில் இல்லை என்பதும் உண்மை! அக் கோயில்களிலேயும், அதன் விளம்பரத்திலேயும் கூடக் கோயிலும், கோவிலும் மாறிமாறித் தலைகாட்டி மயக்குகின்றனவே! கோயில் பெயரிலே கோயிலுக்கே குழப்பம் வரலாமா? கோயில் ஊர்களிலே குழப்பம் வரலாமா?

'கோ' என்பது ஓர் எழுத்து ஒரு சொல். இதற்கு நாற்பதிற்கு மேற்பட்ட பொருள்கள் உளவாயினும், அரசன், தலைவன், இறைவன் என்னும் பொருள்களின் அடிப்படையிலேயே 'கோயில்' என்பது வந்தது. 'கோ இல்' என்னும் இருசொற்களின் இணைப்பே 'கோயில்' என்பது அனைவரும் அறிந்ததே.

கோ - அரசன்; அவன் கோமகன், கோமான், கோவேந்தன் என்றும் வழங்கப்பெற்றான். அரசி கோமகள், கோமாள், கோப் பெருந்தேவி, கோயிலாள் என வழங்கப் பெற்றாள். இருவர்க்கும் தனித்தனி அரண்மனைப் பகுதிகள் இருந்தன. "அரசுறை கோயில்"[1] "அரசன் செழுங்கோயில்"[2] "கோமகன் கோயில்"[3] என்றும், "கோப்பெருந்தேவி கோயில்"[4] "கொங்கவிழ் குழலாள் கோயில்"[5] என்றும் வருவனவற்றால் அறியலாம்.

இனிப் பொதுவகையால், 'கோயில்' என்று வருவன இரண்டன் பகுதிகளையும் உட்கொண்ட அரண்மனைகளையும் காவல் மிக்க மாளிகை இடங்களையும் குறிப்பனவாம். "சோழன் கோயில்"[6] "ஆஅய் கோயில்"[7] "காவல் வெண்குடை மன்னவன் கோயில்"[8] "மாலை வெண்குடை மன்னவன் கோயில்"[9] "மறத்துறை விளங்கிய மன்னவன் கோயில்"[10] "பெரும்பெயர் மன்னவன்

---

1. சிலப் 18 : 25 2. சிலப் 19 : 75; 3. சிலப் 22 : 14; மணி 7 : 64 4. சிலப் 16 - 139. 5. மணி. 23 : 38. 6. புறம் 378; 7. புறம் 127; 8. சிலப். 3. 118; 9. சிலப். 5 : 173; 10. சிலப் 14 : 12;

பேரிசைக் கோயில்''[11] ''வேறுபட்ட வினையோவத்து வெண் கோயில்''[12] என இவ்வாறு வருவனவற்றால் விளங்கும்.

கோயிலில் பணிபுரிந்தவர்கள் கோயின் மாக்கள், கோயிலார் எனப் பெற்றனர். அரண்மனைத் தொடர்பால் பெற்ற பெயர்கள் இவை என்பது வெளிப்படை.

காவல் கடமை புரிந்த வேந்தனைக் கடவுளாக மக்கள் மதித்தனர்; வழிபட்டனர். ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என வாழ்ந்தனர். ''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்'' என அறநூல் கூறும் அளவுக்கு அரசர் செல்வாக்கு இருந்தது. அவர்தம் அரண்மனைக்குள்ளே இறைவனும் கோயில் கொண்டான்; அவன் கோயில் கொண்ட இடமும் கோயில் ஆயிற்று. அரசர்க்குரிய விழாக்களும் சிறப்புக்களும் கோயில்களுக்கு உரியவையாயின. இந்நிலையில் அரசன் கோயிலும் இறைவன் கோயிலும் ஒன்றாகியும், வேறாகியும் விளங்கின. இதனை,

''அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்''[13]

என்றும்,

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்''[14]

என்றும் இளங்கோவடிகளார் இயம்புகின்றார்.

'' அரண்மனை, பெருமாளிகை, இறைவன் குடிகொண்ட இடம் ஆகியவை கோயில் என வழங்கப்பெற்றன'' என்பதை நாம் தெளிவாக அறிகின்றோம். இவற்றுள் எந்த ஓர் இடமும் – எந்த நூலிலும் - கோயில் என்பதை அன்றிக் 'கோவில்' எனக் குறிக்கப் பெற்றதே இல்லை. பழந்தமிழ்ச் சான்றோர் காலம் தொட்டு ஔவைப் பாட்டி காலம் வரைக்கும் கூடக் 'கோயில்' மாறவில்லை.

இடைக்கால பிற்காலங்களில் எழுந்த கோயில் திருவாய்மொழி, கோயில்நான்மணிமாலை, கோயில் கலம்பகம்; கோயில் புராணம், கோயில் திரு அகவல், கோயில் திருப்பணியர் விருத்தம் என்ப

---

11. சிலப். 13 : 138; 12. பட். 50; 13. சிலப் 13 : 137-8.
14. சிலப். 5. 169 : 173.

வற்றிலும் 'கோயில்' செவ்வையாகவே இருந்தது. 'கோயில் ஒழுகு' என்னும் நூலும் தன் 'ஒழுகு' தவருமலே இலங்கியது. ஆனல், இன்று கோயிலும் கோவிலும் குழம்பிக் குலாவுகின்றன! அகர வரிசை நூல்கள் கோயிலொடு கோவிலுக்கும் இடம் தந்துவிட்டன. ஆனல் நிகண்டு நூல்களில் 'கோவில்' புகுந்திலது.

ஆசிரியர் தொல்காப்பியனுர் உயிர்மயங்கியலில், ''இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்'' (91) என்ருர். அதற்கு ''ஓகாரவீற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழியொடு சொல்லின் ஓகாரம் மிகாது இயல்பாய் முடியும்'' என உரைகூறிக் ''கோயில்'' என எடுத்துக்காட்டுத் தந்தார் இளம்பூரணர். ஆனல், இதே உரையைத் தழுவிக் கொண்ட நச்சினர்க்கினியர் உரை ''கோவில்'' என எடுத்துக்காட்டுத் தருகின்றது. இஃது ஏடு எழுதியவர் தவருகவோ, பெயர்த்தவர் தவருகவோ அமைதலும் கூடும்!

கோவூர், கோவியன் வீதி என்பன சங்கச் சான்ருேர் நாளி லேயே வழங்கப் பெற்றனவே எனச் சிலர் எண்ணவும் கூடும். கோவூர் என்பது வகர உடம்படு மெய் பெற்று நின்றது. மற்றது, 'கோ வியன் வீதி' எனப் பிரிந்து 'வியன்' என்னும் அகற்சிப் பொருள்தரும் உரிச்சொல்லாக நின்றது. ''இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை, உயிர்வழி வவ்வும், ஏமுன் இவ் விருமையும், உயிர்வரின் உடம்படு மெய்யென் ருகும்''[15] என்று நன்னூலார் உடம்படு மெய்க்கு விதித்தவிதி கோயிலுக்குப் பொருந்தாது. அதனல் அன்றே, உரைகாரர் ''கோவில்'' எனக் காட்டார் ஆயினர். காட்டினும், ''இலக்கிய வழக்கொடு முரணுவது'' என்று தள்ளுவதே முறையாம்.

''இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்''

என்பது தொன்னெறி. அம் மரபு இருபதாம் நூற்ருண்டின் தொடக்கம்வரை போற்றப்பெற்றது. ''மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்'' என உணர்ந்து 'கோயில்' எனச் சொல்லுதலும் எழுதுதலும் கடமையாம்.[16,17]

———

15. நன்னூல். 162.

16. 'கோயில்' என வழங்கும் இடங்கள் வரம்பிலவாக இருத்தலின் அவற்றையெல்லாம் காட்டாது சிலவே சுட்டப்பெற்றன.

17. பிற்காலப் புலவர்கள், அறிஞர்கள் ஆகியோர் மரபுநிலை மாருமலும், மயங்கியும் எழுதியவற்றைக் கற்பார் கண்டுகொள்வர் எனச் சுட்டிக்காட்டப் பெற்றில.

முதற்காதல்—கபிலர் ஓவியம்

[டாக்டர் செ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

தன் உயிர்த் தோழியிடத்துத் தலைவி ஒருத்தி தன் மனத்தே முதற்காதல் முளைத்த இனிய செய்தியை உரைப்பதாகக் கபிலர் கற்பனை செய்து பாடும் சங்கப்பாடல் ஒன்று அகநானூற்றுட் காணப்பெறுகின்றது. மணிமிடை பவளத்துள் (82) இதனைக் கோத்துள்ளனர் முற்காலச் சான்றோர். குறிஞ்சித்திணை பாடுவதில் வல்ல கபிலரது படைப்பு இது. இதனையும் குறிஞ்சித்திணையமைப்பிலேயே படைத்துள்ளார் இந் நல்லிசைப்புலவர். இப் பாட்டில் கற்பனைப் பாத்திரம் பேசுவது போன்றே தோன்றவில்லை; உண்மையாக ஒரு பெண் பேசுகின்றாள்; தன் அன்புக்கினிய தோழியோடு உள்ளம் கலந்து பேசுகின்றாள்; தன் முதற்காதலை எடுத்து மொழிகின்றாள். பாட்டின் அமைப்பும் அழகும் நம் நெஞ்சினைக் கொள்கின்றன.

''தானும் பெண்கள் பிறரும் தினைப்புனம் சார்ந்த காட்டகத்தே நின்றிருக்கும்போது மலர்ந்த மாலையினை அணிந்த மார்பை உடைய தலைவன் ஒருவன் வந்தான். அவன் அழகான வலிய வில்லைக் கையிலே பற்றிக்கொண்டு வந்தான். சிறந்த அம்பினை ஆராய்ந்து கொண்டே வந்தான். தன்னால் அம்பு எய்யப்பெற்று ஓடிப்போந்த யானையினைக் கண்டதுண்டோ? அது சென்ற வழி யாது என்று கேட்டபடி வந்தான். அவன் தினைப்புனத்தின் வாயிற் பக்கத்திலே நின்றான், அவனைக் கண்டவரோ பலர்'' என்று பேசிக் கொண்டே வருகின்றாள் தலைவி. ''ஆனால் அவர்கள் யாருக்காவது என்போல் துன்பம் உண்டாகவில்லை. இரவிலே அணையின்கண் தங்கி நீர் சொரியும் கண்ணுடன் மெலிந்த தோளை உடையேனாக யான் ஒருத்தியே வருத்தமுறுவேன் ஆயினேன்;'' என்று முடிக்கின்றாள் தலைவி.

இவ்வாறு கூறுவதனால் தன்மனத்தே எழுந்த காதல் உணர்வை மிக நுட்பமாகக் கூறிவிடுகின்றாள் தலைவி. தன் உயிர்த் தோழியே யாயினும் கூட, நாணம் நிறைந்த பண்புநலன் வாய்ந்த தலைவி வெளிப்படையாகக் கூறாமல் சிலவும் பலவுமாய சொற்களை வெளிப்படுத்துவதன் வழியே தெளிவாக்கி விடுகின்றாள்.

"உயிரினும் சிறந்தன்று நாணே" என்று பெண்மைக்குரிய நாணம் உயிரினும் சிறந்தது என்று தமிழ் மாதர் மாண்பிற்கு இலக்கணம் வகுப்பார் தொல்காப்பியர். அதனையே இங்கு நினைவு கூர்கின்றோம்.

"பலர்தில் வாழி தோழி; அவருள்
ஆரிருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓரியான் ஆகுவ தெவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே"

என்ற வரிகள் இவ்வாறு நுட்பமான ஓர் ஓவியமாக ஒரு பெண் உள்ளத்தையே எழுதிவிடுகின்றன.

தலைவனுடைய நாட்டைப்பற்றித் தலைவி ஒரு வண்ண ஓவியம் தீட்டுகின்றாள்; அது பாட்டின் முதற்பகுதியாக உள்ளது: மூங்கில் வளர்கின்ற மலைச்சாரலிலே ஆடுகளத்திற் புகுந்தாடும் விறலியைப் போல மயில்கள் ஆடுகின்றன. அவ்வாறு தோகை மயில்கள் ஆடுகின்ற கலைக் கூத்தைக் காண்பதற்குச் சுவைஞர் வேண்டாவா? மந்திகள் மரக்கிளைகளிலே அங்குமிங்கும் ஆடுதலை மறந்து நல்ல அவையினர்போல வியப்புற்று நோக்குகின்றன. மலைச்சாரலிலே பூத்துக் குலுங்கும் மலர்க்கூட்டங்களில் உள்ள தேனை உண்ணப் பறக்கும் வண்டு ஓசையே யாழ்ஓசைபோல ஒலிக்கின்றது. அசைந்தாடுகின்ற மூங்கில்களிலே வண்டுகள் தம் இயல்பிலே துளைத்தலால் உள்ளதாகிய துளைகளில் மேல்காற்று புகுந்து வெளிப்படும்போது எழும் ஓசை குழல்ஓசை போன்று ஒலிக்கின்றது இனிய ஒலியோடு விழும் அருவிகளின் குளிர்ந்த ஓசை, தொகுதியாகிய முழவின் நெருங்கிய இசை போன்று ஒலிக்கின்றது; கூட்டமாகிய கலைமான்கள் ஒலிப்பது பெருவங்கியம் என்னும் ஊதுகொம்பு ஒலிப்பது போன்று அமைந்துள்ளது. இவ்வாறு தக்க இசைக்கருவிகளின் நல்லோசையாகிய பின்னணியில் கூத்தாடும் விறலி ஒருத்தி ஆடுவது போன்று அழகுமயில் ஆடுகின்ற காட்சி அமைகின்றது. அத்தகு நாட்டை உடையவன் தலைவன் என்று முற்பகுதியை அமைத்து மொழிகின்றாள் தலைவி.

இவ்வாறு விலங்கினங்கள் எல்லாம் மகிழ்ச்சியாற் சிறந்து விளங்குகின்ற நாட்டை உடையவன் நமக்கு மட்டும் துன்பம் செய்வான் ஆயினன் என்னென்று குறிப்பான் உணர்த்துவதாகப் பாட்டு அமைகின்றது.

ஓர் அழகிய இயற்கை ஓவியத்தைக் குறிஞ்சித்திணைப் பின்னணியில் எழுதுகின்றார் கபிலர். 'மலரினும் மெல்லிது காமம்' என்ற வள்ளுவர் கூற்றுத்தான் எத்துணை மெய்யானது என்பதை இப் பாட்டின் செய்தி இனிதுணர்த்துகின்றது. நுண்ணிய காதல்

உணர்வை எடுத்துரைக்கும் கபிலரது இவ் வழகிய படைப்பு ஓவியம் பின்வருமாறு :

“ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை யிகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
நனவுப்புகு விறலியிற் றோன்றும் நாடன்
உருவ வல்வில் பற்றி அம்புதெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினாஅய்ப்
புலர்குரல் ஏனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆரிருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓரியா னாகுவ தெவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே.”

(—அகம். அஉ), குறிஞ்சி.

— — —

ஆரிய வலையினின்று விடுபடுவீர்!

“ஊர் இரண்டு பட்டாற் கூத்தாடிக்கு இளக்கரம்” என்னும் பழமொழிக் கிணங்க, ஆரியப் பார்ப்பனர், பழந் தமிழ் மக்களைத் தம்முட் போராடவிட்டு, அவரெல்லார்க்குந் தாம் மேலானவர்போல் தனி நின்று அவருடைய நலன்களை யெல்லாந் தாம் கைப்பற்றி வருகின்றனர். இனியேனும் இத் தென்றமிழ் நாட்டிலுள்ள தமிழ்மக்கள் தம் பழைய வழக்க ஒழுக்கங்களைப் பண்டைத் தமிழ் நூல்களின் உதவிகொண்டு ஆராய்ந்து தெளிந்து, தாம் சிக்கிக்கொண்ட ஆரிய வலையி னின்று தம்மை விடுவித்துத் தம்மை உண்மையாக உயர்த்துதற் குரிய தமிழ் முறையால் தம்மை உயர்த்தி ஒருமித்துக் கருத் தாய் விரைந்து முயலல் வேண்டும்.

—மறைமலையடிகள்

(வேளாளர் நாகரிகம், பக். உ௦-உக)

திருக்குறள் எங்கே?

[பேராசிரியர் ஜே. ஜி. கண்ணப்பன், M.D.S., F.I.C.D

பல் மருத்துவர், சென்னை.]

உலகப் பொதுமறை எனப் போற்றப்பெறும் திருக்குறளின் புகழ் எந்த அளவுக்குப் பரவலாக மக்களிடையே பேசப்படுகின்றதோ, அந்த அளவுக்கு அதன் உண்மையும் வாய்மையும் நிறைந்த கருத்துக்கள் மக்களால் உணரப்படுகின்றனவா என்பதை எண்ணிப் பார்க்கின்ற நல்லதொரு வாய்ப்பு அண்மையில் எனக்கு ஏற்பட்டது. அதனை விளக்கு முகத்தான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன்.

திருவள்ளுவரால் தமிழில் படைக்கப்பட்ட இப் பொதுமறை வேறு பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது என்று சொல்லிக் கொள்வதிலே நாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றோம். ஆனால், அதே நேரத்தில், பலமொழி பேசும் மக்களைக் கொண்ட இத் தமிழ்நாட்டில், அந்தந்த மொழிகளில் உள்ள திருக்குறளை அந்தந்த மொழி பேசுவோரில் எத்துணைபேர் படித்திருக்கின்றார்கள்? அல்லது அதைப்பற்றி அறிந்திருக்கின்றார்கள், அல்லது அதனை உணர்ந்து அதன் கருத்துக்களைக் கடைப்பிடிக்கின்றார்கள், அல்லது பேச்சு வழக்கிலாவது அதனைப் பயன்படுத்துகின்றார்கள் என்றெல்லாம் பார்க்கின்றபோது, எனக்குப் பெரியதொரு ஏமாற்றமே ஏற்படுகின்றது. தமிழ்நாட்டில், தமிழரைத் தவிரத் திருக்குறளைப் பற்றிப் பேசுவோரையோ எழுதுவோரையோ காண முடியவில்லை.

உலகில், கிறித்தவக் கோயில்கள், இசுலாமிய தொழுகைக் கூடங்கள், புத்த - சமண சமயப் பள்ளிகள், இந்துக்களின் திருக்கோயில்கள் என்று பலப்பல சமய வழிபாட்டிடங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் கல்தோன்றி மண்தோன்றாக் காலமுதற்கொண்டு திருக்கோயில் வழிபாடு இருந்துவந்திருக்கின்றது. தமிழக வரலாற்றினையும், தமிழர் நாகரிகத்தினையும் அறிந்தவர்கள் தமிழரின் இறைவழிபாட்டினைப் புகழ்ந்து கூறுகின்றனர்.

இப்படிப்பட்ட தெய்வத் தமிழ் மொழியில் படைக்கப்பட்ட இத் திருக்குறள் மனிதர் மனிதராக - அறிவுடையோராக - பண்புடையோராக - அறம் அறிந்தவர்களாக வாழ வழிகாட்டும் ஓர் ஒப்பற்ற இலக்கியமாகத் திகழ்கின்றது.

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்று போற்றப் படும் நம்முடைய திருக்குறளை எல்லா நாட்டினரும் எளிதில் அறிந்து - தெரிந்து - படித்துப் பயன்பெறும் வகையில் இதுகாறும் செயலளவில் நாம் என்ன செய்தோம் என்பதைச் சற்று எண்ணிப் பார்த்தபோது, எனக்கோர் எண்ணம் தோன்றியது. "நம்மில் பலர் அடிக்கடி அயல்நாடுகட்குச் செல்லுகின்றனரே, அவரெல் லாம் திருக்குறள் நூல்களை எடுத்துச் சென்று அங்குள்ளோர்க்கு இலவசமாக வழங்கினால் என்ன? அதன் மூலம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடியினராகிய நம் தமிழ்மக்களின் கலை, நாகரிகம், பண்பாடு, ஒழுக்க முறைகள், நீதிகள் இன்னபிறவெல்லாம் அந்தந்த நாட்டு மக்களிடையே பரவுமன்றோ!" என்பதே அது.

இத்தகைய சீரிய பணியினை—திருக்குறள் பரப்பும் பணியினை நாமே செய்து பார்ப்போமே என்ற எண்ணமும் எனக்குத் தோன்றிற்று.

இந்நிலையில் அமெரிக்காவிலுள்ள அவாய் தீவுகளில் கடந்த சூன் 2ஆம் தேதியிலிருந்து 9ஆம் தேதிவரை பல் மருத்துவர் களாகிய எங்களின் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. பற் சீரமைப்பு பற்றிய அக் கருத்தரங்கில் கலந்து கொள்ள நானும் புறப்பட்டேன். புறப்படுமுன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தின் பொது மேலாளரும், என் நண்பருமான திரு. இரா. கலியாண சுந்தரம் அவர்களிடம் திருக்குறள் பற்றிய என் கருத்தைக் கூறினேன்.

திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்கள் ஆர்வத்தோடு என் கருத்தில் பங்கு கொள்ளும் வகையில் திருக்குறளைப் பற்றி உலகப் பெருமக்கள் பலரும் கூறிய கருத்துரைகள் அடங்கிய சிறு வெளி யீட்டினைத் தயாரித்து, அதன் படிகள் சிலவற்றை என்னிடம் கொடுத்து, "உங்கள் கருத்தரங்கிற்கு வந்திருப்போருக்கு இவற்றை இலவசமாக வழங்குங்கள்" என்றார். நானும் மகிழ்வோடு அவற்றை எடுத்துச் சென்றேன்.

எங்கள் கருத்தரங்கில் பங்கு கொண்டோரில் முக்கியமான வர்கள் சப்பானியர்களாவர். மற்றும் பிஜித் தீவு, கொரியா, பிலிப் பைன்ஸ் தீவு ஆகிய இடங்களிலிருந்தும் வந்திருந்தனர். இவர் களுள் சப்பானியர் மட்டுமே ஆங்கிலந் தெரியாதவர்கள். ஆனால் சப்பானில் பல் மருத்துவ மாணவர்கட்கு சப்பானிய மொழியில் தான் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. அதனால் அங்கு ஆங்கிலம்

தேவைப்படவில்லை. ஆங்கிலத்திலிருந்து சப்பானிய மொழியில் பெயர்த்துச் சொல்வதற்குப் பெண் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கின்றார். எனினும் அங்கு அறிவியல் நன்கு வளர்ந்திருக்கின்றது. சப்பானியர் திறமையும் வியக்கத்தக்க அளவில் இருக்கின்றது.

கருத்தரங்கில் கலந்து கொண்ட சப்பானியர்களுக்கு ஆங்கிலத்தில் அளவளாவ முடியவில்லை. அவர்களுடன் பேச இடையே ஒரு மொழி பெயர்ப்பாளர் தேவைப்படுகின்றார். இதனால் அவர்கள் புதிய நண்பர்களுடன் அளவளாவக் கூச்சப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில் நான் ஒருவாறு அவர்களோடு பழகிப் பேச முயன்று, என்னிடமிருந்த திருக்குறள் பற்றிய வெளியீட்டினை அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்களுள் டாக்டர் திக்குமாரா, டாக்டர் மயூரா, டாக்டர் கானே என்போர் குறிப்பிடத் தக்கவர்களாவர். அவர்கள் அதனைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தனர். அஃது அவர்களுக்கு ஒரு புதுமையாகப் பட்டது போலும்! அவர்களின் முகத்தில் ஓர் ஆச்சரியக்குறி தென்பட்டது. அதிலிருந்து திருக்குறளைப்பற்றி அவர்கள் ஒன்றுமே அறியாதவர்கள் என்பது ஒருவாறு புரிந்தது. நான் அவர்களை வியப்போடு பார்த்தேன். நூலைப் புரட்டிப் புரட்டிப் பார்த்த அவர்கள்,

''இஃதென்ன நூல்; இதனை ஏன் எங்களிடம் கொடுத்தீர்கள்?'' என்று கேட்டனர்.

''இஃது எங்கள் நாட்டில் எங்கள் மொழியாகிய தமிழ்மொழியில் இயற்றப்பட்ட ஒரு சிறந்த நீதிநூல்; இதற்குத் திருக்குறள் என்று பெயர்; இரட்டை வரிப் பாடல்கள் அடங்கிய இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் திருவள்ளுவரால் எழுதப்பட்டது; இதன் அருமை பெருமைகள் விளங்குமாறு இஃது உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே, நீங்கள் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அது பற்றிய கருத்துரைகள் அடங்கிய இவ் வெளியீட்டினை உங்களுக்குக் கொடுத்தேன்'' என்றேன் நான்.

''ஓ! அப்படியா! இதில் எங்களுக்குப் பயன்படக் கூடிய செய்திகள் என்ன இருக்கின்றன?'' என்று மற்றொரு கேள்வியைக் கேட்டனர்.

''இவ் வுலகில் வாழும் பல்வேறு சமயத்தினர்க்கும் சமுதாயங்களுக்கும் பயன்படத்தக்க பல அரிய பொதுநீதி முறைகள் திருக்

குறளில் அடங்கியுள்ளன. அவற்றைப் படித்து அதன்படி நடக்க ஆரம்பித்தால் இன்று உலகின் பல பகுதிகளில் நாம் கண்டும் கேட்டும் வருகின்ற கொலை, களவு, காமம், கட்குடி போன்ற பல தீமைகளை விலக்கலாம். மக்கள் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற முறையில் ஒருவருக்கொருவர் அன்புடனும் பண்புடனும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழ அந்நூல் வழி காட்டும். அஃதாவது உங்கள் புத்தமதம் பல அறிவுரைகளைக் கூறவில்லையா, அதுபோல'' என்றேன்.

'புத்தர்' என்ற பெயரைக் கேட்டவுடன் அவர்கள், ஆர்வத்தோடு, 'ஆம்! புத்தர் உங்கள் நாட்டில்தானே பிறந்தார். அங்குத்தானே அவர் 'ஞானம்' பெற்றார்? ஆசையை ஒழிக்க வேண்டும் என்றார். ஆனால் நீங்கள் அவர்களுடைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றீர்களா?'' என்று கேட்டார்.

''ஆம், கடைப்பிடிக்கிறோம். ஆனால், கொள்கை என்ற அளவில் தாம் அவர் கூறிய நல்வாழ்வு முறைகளைப் போற்றி வளர்க்க வேண்டும். மனித சமுதாயத்தில் காணப்படும் கொடுமைகளை ஒழித்து அன்பும் அறனும் அறிவும் நிலவச் செய்ய வேண்டும். நடுவு நிலைமையினைக் கடைப்பிடித்தல் வேண்டும். உயிர்க் கொலை செய்தல் கூடாது—இவையே அக் கொள்கைகள். அவற்றைத்தான் எங்கள் திருக்குறளும் கூறுகின்றது'' என்றேன்.

இதைக் கேட்டதும் அவர்கள் என்னை வியப்போடு பார்த்து, ''ஓ! அப்படியா! நாங்கள் அறிந்த வரையில் 'திருக்குறள்' என்னும் அப்படிப்பட்ட நூல் ஒன்று இருப்பதாகவே எங்களுக்குத் தெரியாது. எங்கள் நாட்டில் அதைப் பற்றி எடுத்துக் கூறியவர்கள் உண்டா என்றால், நாங்கள் அறிந்த வரையில் இல்லையென்றே சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட நூல் ஒன்று எங்களுக்குக் கிடைக்குமானால், நாங்கள் விழிப்புணர்ச்சி பெற ஒரு நல்ல வாய்ப்பாக இருக்குமே! இந்த வெளியீட்டில் திருக்குறளின் சிறப்புக்கள் பற்றித்தான் கூறப்பட்டுள்ளதே தவிரக் குறளைப் பற்றிய விளக்கம் ஏதும் இல்லையே'' என்றனர். பேச்சு மேலும் தொடர்ந்தது.

அப்பொழுதுதான் எனக்கு உண்மைநிலை புரிந்தது. சப்பானிலும் ஹாங்காங்கிலும் திருக்குறளைப் பெற்றுக்கொண்டவர்கள் இருந்த போதிலும் அந் நாட்டு மக்கள் திருக்குறளைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாக இருக்கின்றனர் என்ற செய்தியறிந்து மிகமிக வருத்தமடைந்தேன்.

மேலும் நான் அவர்களிடம் உரையாடியதிலிருந்து அவர்கள் கிறித்தவ மறையான விவிலியத்தை அறிந்திருக்கும் அளவுக்கு—முகம்மதிய மறையான குரானை அறிந்திருக்கும் அளவுக்கு—இந்துமத பகவத்கீதையை அறிந்திருக்கும் அளவுக்குத் தமிழ்ப் படைப்பான திருக்குறளை அறிந்து கொள்ளவில்லை என்பதை ஒருவாறு புரிந்துகொண்டேன்.

விவிலியத்திற்கு (Bible) அடுத்தபடியாகப் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது திருக்குறள். ஆனால், குறள் எந்தஅளவுக்குப் பரப்பப்பட்டுள்ளது என்பதைக் காணும்போது ஏமாற்றமே ஏற்படுகின்றது.

அமெரிக்காவில்கூட எங்கள் திருக்குறள் இருக்கிறது என்று பெருமையோடு சொல்லலாம். ஆனால், குறள் அமெரிக்க நூல் நிலையங்களில் இருக்கலாமே யொழிய அதனைப் படிப்போர் உண்டா எனில் இல்லையென்றே சொல்லவேண்டும்.

திருக்குறள் ஆராய்ச்சிக்கெனத் தமிழகத்தில் மூன்று பல்கலைக் கழகங்களில் தனித்துறைகள் இருப்பினும் திருக்குறளைப் பரப்புவதற்கென்று தமிழ்நாட்டில் ஏதேனும் ஒரு குழுவோ இயக்கமோ உண்டா யெனின், இல்லை; இதை நினைக்கும்போது வருத்தமாகத்தான் இருக்கின்றது.

எனவே, அறிவுக் கருவூலமான திருக்குறளை, நீதிக் களஞ்சியமான திருக்குறளை நம் நாட்டவரும், பிற நாட்டவரும் நன்கு அறிந்து பயனடைய வேண்டுமெனில் நாம் உருப்படியான சில திட்டங்கள் வகுத்து அவற்றைச் செயல்படுத்த வேண்டும்.

இதோ அத் திட்டங்கள் !

(1) முதலில் தமிழகத்தில் திருக்குறளைப் பரப்புதற்கென ஒரு குழு அல்லது இயக்க (Tirukkural Society of India) தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

(2) ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்கள் பிறமொழியாளர்கட்கு இலவசமாக வழங்க வழிசெய்ய வேண்டும்.

(3) இல்லங்கள் தோறும் ஒரு திருக்குறள் இருந்தாக வேண்டும் என்ற நிலையினை உருவாக்க வேண்டும்.

(4) அயல் நாடுகட்குச் செல்லும் தமிழர்கள் திருக்குறளை எடுத்துச் சென்று ஆங்கெல்லாம் அவை பரவும் வகை செய்தல் வேண்டும்.

(5) தமிழகப் பேருந்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது போல், தமிழன்பர்கள் தாம் பயன்படுத்தும் கடிதங்களில் (letter head) ஒரு சிறந்த குறளை அச்சிட்டு வைத்தால் கடிதங்களைப் படிப்போர் குறட் கருத்தையும் புரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும்.

(6) தமிழகத்தின் சேரன், சோழன், பாண்டியன் பல்லவன் போன்ற அரசர்கள் பெயர்களில் போக்குவரத்துக் கழகங்கள் அமைத்துள்ளதுபோல் திருவள்ளுவர் நினைவாக, 'திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்' ஒன்று அமைத்து நடத்துதல்வேண்டும்.

(7) உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் - குறிப்பாக சப்பானில் - பெரிய விடுதிகளில் ஒவ்வொரு அறையிலும் ஓய்வு நேரங்களில் படிப்பதற்காக 'விவிலியம்' 'புத்தர் பொன்மொழிகள்' ஆகிய நூல்கள் வைக்கப்பட்டுள்ளதுபோல 'திருக்குறள்' ஆங்கிலப் பதிப்பும் பெரிய விடுதிகளிலாவது வைக்கப்படவேண்டும்.

(8) திருக்குறளைத் தமிழகத்திலும் இலவசமாக மக்களுக்கு வழங்கலாம். ஆனால், அதன் அருமை தெரியாமற் போகும் எனக் கருதுவோர் விரும்பிப் படிப்பவர்க்குமட்டும் குறைந்த விலையில் வழங்கலாம்.

இவ்வாறெல்லாம் குறள் நெறியைப் பரப்ப ஆர்வமுள்ள தமிழர்கள், தமிழியக்கங்கள், திருக்குறள் ஆராய்ச்சிக் கழகங்கள், குறள் நெறி பரப்பும் கழகங்கள், தமிழக அரசு ஆகிய அனைத்து சக்திகளும் தம்மாலியன்ற முயற்சிகள் செய்து திருக்குறள் பாரெங்கும் பரவும் வகை செய்யுமாக. இன்றேல் திருக்குறளைப் பற்றி நாம் பேசுவன எழுதுவன எல்லாம் வெறும் பகட்டுச் செயலேயாகும் என்பதில் ஐயமில்லை.

வான்புகழ்!

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

—சுப்பிரமணியபாரதியார்.

ஆர்க்காடு

[புலவர் இறைக்குருவனர்]

ஆர் என்பது ஆத்தியைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். தமிழ்நாட்டுப் பெருவேந்தர் மூவருள் சோழர்க்குரிய அடையாள மாலை ஆத்திப்பூ மாலையே யாகும். பனம்பூமாலை சேரர்க்கும்', வேப்பம் பூமாலை பாண்டியர்க்கும் சிறப்புரிமை யுடையன. இதனை,

''போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்''[1]

என்னுந் தொல்காப்பிய நூற்பாப் பகுதி சுட்டுகின்றது.

சோழவேந்தர் இருவர் தமக்குள் போரெதிர்ந்து நின்றகாலை அவர்தம்மைச் சந்துசெய்யப் புக்க புலவர்பெருமானுன கோவூர் கிழார்,

''இரும்பனை வெண்டோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே''[2]

என்று எடுத்துரைத்து அறிவுறுத்துகின்றார்.

சமய நூல்கள் ஆத்திமலரைச் சிவபெருமானுக்குரிய சிறப்பு மலராகக் குறிப்பிடுகின்றன.

''ஆருடை அம்பொன் மேனி
அமுதினை நீவரக் கூவாய்!''[3]

என்பது திருவாசகம்.

''ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே!''[4]

என்றவிடத்து ஒளவை மூதாட்டியார் சிவபெருமானை ஆத்திசூடி என்றே குறிப்பிடுகின்றார். அதனால் அவரியற்றிய அறநூலும் ஆத்திசூடி என்றே பெயர்பெற்றுள்ளது. இங்ஙனம் தமிழ்ப்பெருமக்

1. தொல் - பொருள் - புறத். 5.
2. புறம் - 45.
3. திருவாசகம் - குயிற்பத்து. 9.
4. ஆத்திசூடி, கடவுள் வாழ்த்து.

களின் புறவியலாகிய அரசியலிலும் அகவியலாகிய சமயவியலிலும் ஆத்தி சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது.

ஆர் மரங்கள் நிறைந்த ஊர் ஆரூர் என்று பெயர் வழங்கப் பட்டது. திருப்பெற்ற ஆரூர் திருவாரூர் ஆயிற்று. திருமுறைப் பெருமையும் தேரூர் சிறப்பும் வாய்ந்த, தஞ்சை மாவட்டத்து இப் பேரூரேயன்றித் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஆரூர் என்னும் பெயரில் சிற்றூர் ஒன்றும் உண்டு. தகடூர் மாவட்டத்திலுள்ள அரூர் என்பதும் ஆரூரின் திரிபே எனக் கருதப்படுகின்றது.

ஆர் மரங்கள் அடர்ந்த பகுதி ஆர்க்காடு எனப்பட்டது. பாலாற்றங் கரையிலுள்ள இவ் வூரைப் பண்டைக் காலத்தே அழிசி என்னும் மறஞ்சிறந்த மன்னன் அரசுரிமையாகக் கொண்டு ஆண்டு வந்தனன். இவன் படைவலமும் கொடைநலமும் வாய்ந்த சேந்தன் என்பவனின் தந்தையாவன். இச் செய்தி கழக இலக்கியங் களான் அறியப்படுகின்றது.[5] திருமுதுகுன்றத்தை யடுத்த சேத்தி யார் தோப்பு அணைக்கட்டின் கிழக்கேயுள்ள அழிசிகுடி என்னும் ஊர் இம் மன்னனின் பெயர் தாங்கி விளங்குகின்றது. குறுந் தொகை 271 ஆம் பாடலைப் பாடிய அழிசி நச்சாத்தனார் இவ் வழிசி குடியினராகவோ அழிசியின் குடியினராகவோ இருக்கலாம்.[6]

ஆர்க்காட்டுக் கூற்றம் என்றதொரு பெயர் கல்வெட்டுகளான் அறியப்படுகின்றது.[7] அகநானூற்றில் 64ஆம் பாடலை யாத்த வெள்ளைக் கண்ணத்தனாரின் தந்தையார் ஆர்க்காடு கிழார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தனர் என்பது ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் என்னும் பெயர் வழக்கான் அறியப் படுகின்றது.

இற்றை நாளில் கிச்சிலி என்னும் அரிசியால், மெச்சப்படு கின்ற ஆர்க்காடு பண்டும் நெல்விளை கழனியால் நிரம்பிய சிறப் புடன் திகழ்ந்திருக்கின்றது.

> "வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
> அரியலங் கழனி ஆர்க்காடு"

என்று ஆர்க்காட்டின் சிறப்பை நற்றிணை நவிலுகின்றது.

---

5. நற்றிணை : 190; குறுந்தொகை ; 258.

6. குறுந்தொகை 27; 138; 145; 240 ஆகிய பாடல்களைப் புனைந்த கொல்லன் அழிசியார் என்னும் புலவர் பெருமான் பெயரில் அமைந்ததாகவும் இருக்கலாம்.

7. குறுந்தொகை - உ. வே. சா. பதிப்பு - பக். 86.

அன்றியும்,

"ஆர்க்கா டன்ன
காமர் பணைத்தோள் நலம்வீ றெய்திய
வலைமான் மழைக்கட் குறுமகள்"

என்று நற்றிணையும்,

"ஆர்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம்"

என்று குறுந்தொகையும் தலைமகளின் அழகிய தோற்றத்திற்கு இவ் வூரை உவமையாகச் சுட்டுகின்றமையால் இஃது எழில் நலம் மிக்க வளமுறு நகராகப் பொலிந்தமை அறியப்படுகின்றது.

முகலாயப் பேரரசின் காலத்திலும் ஆர்க்காடு சிறப்புடன் விளங்கியது. ஔரங்கசீபு 1692இல் சூல்பிக்கர் அலி என்பவனைத் தன் ஆளுமைக்குட்பட்ட தென்னாட்டிற்குச் சிற்றரசனா (நவாபா)க அனுப்பினான். அவன் ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சினான். கருநாடகத்தின் பெரும்பகுதி இவ் ஆர்க்காட் டரசின் ஆளுமையின்கீழ் இருந்தது. பின்னர் ஆர்க்காட்டரசனாய் இருந்த சாதத்துல்லாகான் ஔரங்கசீபுவின் மறைவிற்குப் பின் தனியுரிமை அரசனானான்.

இஞ்ஞான்று இருபெரும் மாவட்டப் பெயர்களில் இடம் பெற்றுள்ள ஆர்க்காடு, வடார்க்காடு மாவட்டத்தில் வாலாசாபேட்டை வட்டத்தில் ஒரு சிறுநகராக விளங்குகின்றது. பழைய பள்ளி வாசல்கள் ஆர்க்காட்டின் வரலாற்றுப் பெருமையை விளக்கி நிற்கின்றன. இங்குள்ள தில்லிவாயிலுக்கு மேலேயுள்ள அறையில் ஆங்கிலேய ஆளுநனான கிளைவு தங்கியிருந்தமையால் அவ்வறை கிளைவு அறை என்று குறிப்பிடப்படுகின்றது.

இனி, கிரேக்க மொழியில் ஆர்க்காதாசு (Arkatos) என்ற இந்தியச் சிற்றரசன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமையை எடுத்துக் காட்டும் அறிஞர் கால்டுவெல் பெருமகனார் கிரேக்கர்கள் அடிக்கடி மன்னன் பெயரையும் நாட்டின் பெயரையும் மயங்கக் கூறுவதுண் டாகலின் ஆர்க்காடு என்னும் ஊரின் பெயரே மேற்கூறியாங்கு மன்னன் பெயராக மாறியிருக்கக் கூடுமோ என்று ஐயுறுகின்றார். தி. பி. 14ஆம் நூற்றாண்டினரான இபின்பதூதா என்னும் அராபிய எழுத்தாளரால் இப் பெயர் எடுத்தாளப்பட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[8]

---

8. Comparative Grammar of the Dravidian Language—page : 93, 94.

ஆர்க்காட்டை ஆரியப்படுத்தப் புகுந்தோர் அப் பெயரில் ஆர்ந்துள்ள பொருளைத் தேர்ந்துணர மாட்டாது ஆறுகாடு என்று வேறுபடக் கருதி "ஷடாரண்யம்" என்று திரிபுறப் பெயர்த்தனர்; அதற்கேற்ப "ஷடாரண்ய புராணம்" என்னும் பொய்மைத் தோன்மம் ஒன்றையும் புனைந்து கட்டிவிட்டனர்.[9]

ஆறு முனிவர் வாழ்ந்த காடு ஆதலின் ஆறுகாடு - ஆற்காடு என்று பெயர் வழங்கப்படுகின்றதென்று அவ்விடத்துள்ளோர் கூறுவதாக அறிஞர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். குறிப்பிட்டு ஆறுகாடு என்பது பிறசொற்களோடு புணரும்போது 'ஆறுகாட்டு' என்று வல்லொற்று இரட்டித்து வரும் என்று சுட்டிக்காட்டி, மேற் கூறிய ஆர்க்காடாசு (Arkatos) என்பதில் வல்லோசை மிக்குள்ளமைக்கு அமைதி கூறுகின்றார். இவ் வமைதி ஆர்க்காடு என்பதற்கும் பொருந்துவதேயாம். ஆயினும் அவர் ஆர்க்காடு என்னும் மெய் வழக்கை அறிந்திலர். கழக நூற் பயிற்சியும், அறிவியல் வழிப்பட்ட மொழியாராய்ச்சியும் இல்லாத அக் காலத்தே அவர் அறிந்துகொள்ள வாய்ப்புமில்லை.

ஆற்காடு என்போர் ஆல்+காடு; ஆல் மரக்காடு - ஆல மரக்காடு என்று விளக்கங் கூறுவர்.[10] ஆல் என்னுஞ் சொல் பிற சொற்களோடு புணருங்கால், தொல்காப்பியர்,

"பூல்வேல் என்றா ஆலென் கிளவியொடு
ஆமுப் பெயர்க்கும் அம்மிடை வருமே"[11]

என்றாங்கு ஆலங்கன்று, ஆலங்கிளை, ஆலம்பழம் எனவும், ஆலங்காடு, ஆலங்கானம், ஆலங்குடி, ஆலஞ்சேரி எனவும் 'அம்' சாரியை பெற்றே வரக்காண்டலானும், மேற்காட்டிய சொற்பொருள் விளக்கத்திற்கும் இருவகை வழக்கிற்கும் புறம்பாய் இருத்தலானும் அது வெறும் போலியேயாம் என்க!

ஆர் என்பது ஆத்தியைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல்லாம் என்பதும், ஆத்திமலர் தமிழர்தம் அரசியலிலும் சமயவியலிலும் சிறப்பிடம் பெற்றதாம் என்பதும், ஆர் நிறைந்த ஊர்ப் பெயர்களும் பல உள வென்பதும், ஆர்க்காடு என்னும் ஊர் கழகக் காலம் முதல் ஆங்கிலேயர் காலம்வரை இலக்கியச் சிறப்பும், வினைபொருட் சிறப்பும், அரசியற் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் பிறவும் வாய்ந்ததொன்றாம் என்பதும், ஆர்க்காட்டை ஆறுகாடு— ஷடாரண்யம் என்றும், ஆறுமுனிவர் காடு என்றும், 'ஆல்காடு - ஆற்காடு என்றும் வேறுவேறு கூறுவார் கூற்றெல்லாம் செல்லுபடியாகா என்பதும் பிறவும் விளக்கப்பட்டன.

———

9. ஊரும் பேரும் - (இரா. பி. சேது.) பக் : 40.
10. கலைக்களஞ்சியம் - ஆர்க்காடு.
11. தொல் – எழுத்து : 376.

இளையர் என்போர் ஏவலரா?

[புலவர் பா. நாராயணன், ஆத்தூர்.]

''யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.'' (புறம். 191)

இப் பாடல் கோப்பெருஞ் சோழனின் உளமொத்த நண்பரும் ஆன்றவிந் தடங்கிய சான்றோருமாகிய பிசிராந்தையார் பாடியது. கோப்பெருஞ்சோழன் தன் மக்கள்பால் வெறுப்புற்று உயிர் நீப்பான், வடக்கிருந்துழி, அஃதறியாராயினும், அவ் வேந்தைக் காணவேண்டு மென்னும் வேட்கையால், அவண் வந்த பிசிராந்தையாரை, ஆங்கிருந்த புலவர்கள் இம் முதுமைப் பருவத்தும் நுமக்கு நரை யின்மைக்குக் காரணம் யாதோ? என வினவிய வழி, அதற்களித்த விடையாகவே இப் பாடல் அமைந்துள்ளது.

நீவிர் பல ஆண்டுகளைக் கடந்துள்ளீர், அங்ஙனமாயினும் உமக்கு நரை தோன்றவில்லை. இவ்விளமைக்காம் இயல்பினை எவ்வாறு செய்து கொண்டவராயினீர் என்று கேட்பீர்களாயின், மாண்புமிக்க குணஞ்செயல்களையுடைய என் மனைவியோடும், என் மக்களும் அறிவானிரம்பினர்; என் பின்பிறந்தோரும் யான் கருதுவ தொன்றனையே கருதும் இயல்பினை உடையார்; வேந்தனும் கோலாற் செவ்விய இயல்பினை உடையான்; வேந்தன் கோல் செவ்வியனாதற்கு முதற்காரணமாக, யான்வாழும் ஊரின்கண் நற் குணங்களால் உயர்ந்து, பணியத்தக்க உயர்ந்தோரிடத்துப் பணிந்து, புலனடங்கிய கோட்பாட்டினை உடைய சான்றோர் பலர் வாழ்கின்றனர் என்பது இதன் பொருள்.

மிக மிக முதிர்ந்த பருவத்தையுடைய பிசிராந்தையாரைக் கண்ணுற்ற புலவர் பெருமக்கள், இவர்தாம் ''உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்'' எனத் திருமூலர் கூறியாங்கு உயிர்நலமும், உடல்நலமும் பேணும் ஒண் மருந்து (காயகற்பம்) உண்டு உடல் வளம் போற்றும் ஒள்ளறிவாளரோ ? அல்லது அருந்தவமாற்றும்

பெருந்தகவுடையரோ? எனக்கருதி, ''யாண்டு பலவாக நரையில வாகுதல், யாங்காகியர்' என வினவினர்.

நுண்மாண் நுழைபுல மிக்கவராகிய பிசிராந்தையார், இவ் வினவையே விடைமுதற்கண் எடுத்தோதி, நும் வியப்பிற்குரிய புதிய காரணங்களுள் யாதுமின்று; கவலையின்றி, ''வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வியல் நெறி'' என் வாழ்வின்கண் இயல் பாகவே அமைந்துளது எனக் கூறத் தொடங்கித் தம் வாழ்வின்கண் மன அமைதிக்கு ஊறு செய்யாக் காரணங்கள் இவையென வரிசைப் படுத்திக் கூறுகின்றார்.

ஒருவருடைய வாழ்வில், அன்னை, தந்தை, ஆசிரியர், உடன் பிறந்தோர், நண்பர், உறவினர், மனைவி, மக்கள், ஊரியல்பு, நாட்டியல்பு, வேந்தியல்பு போன்ற காரணங்களே ஆக்கத்திற்கும், அழிவிற்கும் உறுதுணையாவன. நோயுண்மை செல்வமின்மையோ வெனின் ஒழுக்கமுடைய சான்றோர்பால் நோய் அரிதே. செல்வமோ இஞ்ஞான்று போல அஞ்ஞான்று ஈட்டிக் குவித்து இவறன் மேற்றாகிய இயல்பினதன்று; ''எல்லோர்க்குங் கொடுமதி மனை கிழவோயே'' என்றாங்குப் பல்லோர்க்கும் வழங்கி வாழ்ந்த காலமது. அன்னையும் தந்தையும் ஆசிரியரும் நல்வழிப்படுத்தி ஆக்குவிக்குஞ் சான்றோரேயன்றி, அவராலெய்துங் கேடொன்று மின்றாம். நண்பர், உறவினர் நற்பண்பற்றவராயின், ''தூற்றாதே தூரவிடல்'' என்றாங்கு விலகியும் வாழ்தல் கூடும். எனவே, மனைவி, மக்கள், உடன்பிறந்தோர் எனத் தம்மொடும் ஒருங்கொன்றி, உடன் வாழ் மக்களால் தமக் கெய்துங் கேடும், அதனாலெய்துங் கவலையுமில வென்பார்.

> ''மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்,
> யான்கண் டனையர்என் இளையரும்''

என முதற்கண் தம் குடும்பச்சூழ்நிலை கூறினர். எனவே, என் குடும்பத்தாரால் யானெய்துங் கவலையொன்று மில்லையென்றாராம். மாண்ட என்பது மாட்சிமை என்னும் பொருட்டு; அது நற்குண நற்செய்கை மேனின்றது. நிரம்புதல்—அறிவானிரம்புதல்; ஈண்டஃது, மனைவி, மக்கள் என்னும் இருசாரார் மேலும் நின்றது. அறிவானிரம்புதல் கூறவே, அனைத்தியல்பானும் நிரம்பினர் என்பதாம்.

> ''மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

எனவும்,

''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற''

எனவும் வரும் மறைமொழிகள் ஈண்டு நினைவுகூரத்தக்கன. ''மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்'' என்பதற்கு ''என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினர்'' என்பது உரை. ''மனைக் கிழத்தி நற்குண நற்செய்கைகளை உடையளாதல் அவட்கு மாண்பு. மக்கள்பால் நிரம்புதற்கமைந்த அறிவாதலால் ''அறிவு நிரம்பினர்'' என்று உரை கூறினர். மனை வாழ்வானும் மகப்பெற்று வளர்த்த லானும் மனைவிக்கும் இயற்கையறிவு மிகுந்து நிரம்புதலின், ''மனைவியொடு'' எனச் சிறப்பித்தார். ''செறிவும் நிறையும் செம்மையும் செப்பும், அறிவும் அருமையும் பெண்பா லான (பொருளியல் : கரு) எனத் தொல்காப்பியனர் எடுத்தோதுதலுங் காண்க'' என்பது விளக்கம். இஃதீண்டாயற் பாலதொன்ரும். ''ஆசிரியனெடு மாணவன் வந்தான்'' என்ருற்போல நிரம்புதலாகிய செயலினை, மனைவியு மக்களுமாகிய இருவர்மாட்டு மேற்றி, மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர் என்ருர்.

அறிவு கொளுத்தக் கொண்டு நிரம்புமியல்பினர் மக்களாதலின், மக்களும் நிரம்பினர் என வாளாகூறி, மக்கட்கு முதற்கண் அறிவு கொளுவுங் கடப்பாடுடையாள் அன்னையாகலின், அவண் மாட்டுக் கல்வி மாண்போடு மனைமாண்பு முதலியனவும் செம்மையாகவே அமைந்துளது என்பது கருதி ''மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்'' என மனைவி எனும் சொற்குமுன் மாண்ட என்னும் அடை கொடுத்தோதினர். எனவே, மக்கட்கு அறிவுறுத்தி வளர்க்கும் கல்வியறிவும், மனையறம் போற்றும் மனை மாண்பும் உடையவள் என் மனைவியெனத் தம் மனை மாண்பும், அதனுற் றமக் கெய்தும் நற்பயனுந் தோன்றக் கூறினர் என்பதாம். ''மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனை மாட்சித் தாயினும் இல்'' எனவும், ''இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென் இல்லவள் மாணுக் கடை'' எனவும் வள்ளுவங் கூறிப் போந்ததும் அப் பண்பும் நோக்கியன்ருே?

அவ் வடியின்கண் கொள்ளக்கிடந்த பொருள் அதுவாயினும், அறிவை மக்களளவில் நிறுத்தி, மகளிர்க்குக் கல்வியானிரம்பு மறிவின்றென்னுங் கருத்தான் ''மனை வாழ்வானும் மகப்பெற்று வளர்த்தலானும் மனைவிக்கு இயற்கை அறிவு மிகுந்து நிரம்புதலின் மனைவியொடும் எனச் சிறப்பித்தார்'' என விளக்கிச், ''செறிவும் நிறையும் செம்மையும் செப்பும், அறிவும் அருமையும் பெண்பாலான''

என மேற்கோளுங் காட்டிப் போந்தனர். மனைவாழ்வு முதலிய வற்றுனெய்திய இயற்கை அறிவெனின், அவர்கட்குக் கல்வியறிவு இன்றுமென்பது போதரும். அஃதெவ்வாற்றானும் பொருந்துவ தன்றும். அந் நூற்பாவும், அவர்தாம் கல்வியறிவு இலரா மென்பதற்கு இடந்தரா.

மற்றும் "பிறப்பே குடிமை ஆண்மை யாண்டொடு, உருவு நிறுத்த காமவாயில், நிறையே அருளே உணர்வொடு திருவென, முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே" (தொல். பொருள் உஎ௩) என்னும் நூற்பாவில் "உணர்வும்" என்பதற்கு "ஒத்த அறிவும்" எனப் பேராசிரியர் உரை கூறிப்போந்ததும் இருபாலாரும் ஒத்த அறிவினராதல் வேண்டுமென்பது கருதியன்றோ? "எவ்வழி ஆடவர் நல்லவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என ஆடவரை இடித் துரைக்கும் அளவு புலமை பெற்ற ஒளவை மூதாட்டியார் போன்ற பெண்மக்கள் வாழ்ந்த நாட்டில் மகளிர் கல்வியறிவிற்குப் புறம் பானவர் என்று கோடல் பொருந்துவதன்றும். இவ் வழக்குப் "பெண்ணியல்பாற் றுனக அறியாமையின் கேட்டதாயென்றூர்" என்றாற் போலப் பிறர் மதம் பற்றிக் கூறியதொரு வழக்கெனவே கோடல் வேண்டும்.

இனி, என் இளையரும் என்பதற்கு உரையாசிரியர் இருவரும் ஏவலர் எனவே பொருள் கொண்டுள்ளனர். அவ் வுரை நேரி தன்றும்; இளையர் என்பது, மகளிர், வீரர், இளம் பருவமுடையார், மக்கள், தம் பின் பிறந்தோர், ஏவலர் என மக்களுள் பல திறப் பாட்டாரைக் குறிப்பதொரு சொல்லாயினும், ஈண்டஃது உடன் பிறந் தார் மேனின்றதொரு சொல்லாம். "தம்பியர்", "தங்கையர்" என்றாற்போல எண்ணில் காட்சி இளையோர் (புறம் ; உக௩) என்புழி, அது கோப்பெருஞ் சோழன் மக்கண்மேலும், "இளையவன் முனியும்" (கம்பராமாயணம். சூர்ப்ப : ௬௭) என்புழி அஃது உடன் பிறந்தான் மேலும் சென்று பொருள் பயந்து நின்றதன்றோ? ஏவலர் செவ்வையில் வழி அவரையகற்றிச் செவ்வி மிக்காரை அமைத்துக் கோடலுங்கூடும். அவர் உடன் பிறந்தே கொல்லும் நோய் போன்றவர் ஆகார்.

உடன் பிறந்தோர் செம்மையில் வழியே அது துயர் தருவ தொன்றும். அத் துன்பியல் நேராவகையில் என் உடன் பிறந் தோரும் அறிவு நலஞ்சான்ற நல்லோர், யான் கருதுவதே கருதும் முரண்படா உளக்கோட்பாட்டினர் என்பார், "என் இளையரும்" என்றார். என் குடும்ப மட்டுமன்று யான் வாழும் ஊரும் சான் றோரை உடையதாகலின், ஊர் பற்றிய கவலையு மின்றென்பார்,

''சான்றோர் பலர் யான் வாழும் ஊர்'' என்று கூறினர். வீட்டியல்பும், ஊரியல்பும், தக்காங்கு அமைந்துளதேனும், நாட்டியல்பு நன்கில்லையேல் அவலமாமன்றே? அவ் வகையானும் அவலமின்றென்பார், ''வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்'' என்றார். மலர் தலையுலகம் மன்னனை உயிராகக் கொண்டது என்பதுதானே ஆன்றோர் கொள்கை! மற்றும் சான்றோர் பலராதலின், வேந்தன் நெறியல் வழிச் செல்ல நேரின் 'இடித்துத் திருத்தும் இயல்பினர் என்பது போதரச் 'சான்றோர் பலர்யான் வாழு மூரே' என அதனை இறுதிக் கண் வைத்தோதினர். அதன் தலை என்பதற்கு, 'அதற்கு மேலும்' எனப் பொருள் கூறியுள்ளனர். அதற்கு முதற் காரணமாக எனப் பொருள் கொண்டு அக் காவல் நெறி பிறழாமைக்கு முதற் காரணமாக அமைந்தோர் சான்றோர் எனக் கோடலே சிறப்புக்குரியதாம். தலை என்பதீண்டு முதலென்னும் பொருட்டு; காரணமென்பதேவ நவித்துரைக்க. சங்கச் சான்றோர் இவ்வாறு அரசரைத் தெருட்டியமை வரலாறன்றோ?

மற்றும் யான் வாழூமூர், அதன் தலைச் சான்றோர் பலர்; வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் எனமாறி இயைத்துப் பொருளுரைப்பினுமாம். ஊர் அதன் தலை என்பதற்கு ஊராகிய அவ்விடத்து எனப் பொருள் கொள்க. இப் பாடற்கு இவ்வாறு பொருள் கொள்ளின் சிறக்குமென்பது கருதியே விளக்கியுரைக்கப் போந்தாம். அறிவு நலம் சான்றோர் ஆய்க.

———

வி-ம்.

பண்டைத்தமிழ் முக்கழகப் பாங்கு

[புலவர் பொன். முனியப்பன், கூவலூர்.]

எழுந்துயர்ந்த குமரிநில எழிற்பரப்பில் பிறந்தவர்கள்
வழுவமையாத் தமிழ்வளர்க்க அமைத்தஅவை வழிவழியாய்
முக்கழகம் எனவாகி முழுப்பயனும் வழங்கினகாண்
அக்கழகப் பணிகளெல்லாம் அலைகடலுள் அமிழ்ந்தாலும்
இடைக்கழகம் படைத்தளித்த இலக்கணமும் பிறகலையும்
கடைக்கழக இலக்கியமும் உடைமையெனக் கிடைத்தனவே.

திருமிகுக்கும் பனுவலினை உருவாக்கும் பணிகளுக்காய்
அருமையுடைக் கழகங்கள் அமைக்கவில்லை; பழங்காலம்
பெருமையொளிர் இலக்கியங்கள் பிறகலைகள் வரம்பின்றிப்
பெருகியதைக் கணித்தாயப் பிறந்ததுதான் கழகங்காண் !

இழப்படையாக் குமரிநிலம் ஏழேழாய் இருந்ததனுல்
வளநாட்டிற் கொருவரென வகுத்தமைத்தார் புலவரினை
உளமொன்றி அனைவருமே உயர்பணிகள் புரிந்ததனுல்
பிளவகற்றும் அறிவுதரப் பிறந்ததுதான் கழகங்காண் !

இன்றுநம், பல் கலைக்கழகம் இயற்றுகின்ற பணிகளினை
வென்றுவிடும் முறையிலன்று வியன்ஆய்வு நிகழ்ந்ததுடன்
மன்பதைக்கே வழிகாட்டும் மதிப்பமைந்த நுழைபுலத்தைப்
பின்னவர்க்கும் உதவுதற்காய்ப் பிறந்ததுதான் கழகங்காண் !

எனவே,

கழகம் தந்ததைக் கடலுடன் இடையில்
அழலாய் வந்தவோர் அயலரும் கெடுத்ததால்
பயனெலாம் பதரெனப் பறந்திடப் பழம்பயன்
நயத்தைத் துய்த்துயர் நலத்தினைப் பெருமல்
மடிந்தநாம் இனியேனும் மாற்ருரை
இடியெனக் கடிந்தொழித் தெழிற்பயன் விளைப்போம்.

———

ஆத்தூர்க் கல்வெட்டு

[அ. பாஸ்கரபால்பாண்டியன் எம். ஏ., பில். டி ஜி. டி.]

முன்னுரை :

ஆத்தூர் என்ற பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உண்டு. இங்குக் குறிக்கப்படுவது திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர்-தூத்துக்குடி நெடுஞ்சாலை பொருநையாற்றின் தென் கரையில் அமைந்திருக்கும் ஆத்தூர் ஆகும். பண்டைய பாண்டியரின் துறைமுகமாகப் பொலிவுடன் திகழ்ந்த கொற்கைப் பெருந்துறையின் அருகில் இவ் வூர் அமைந்துள்ளது. சிவபெருமான் சோமநாதர் என்னும் பெயரில் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். சோமநாதர் ஆலயத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன.

சேனுவரையர் :

தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலுக்கு உரை எழுதிய சேனுவரையர் இக் கோயிலுக்கு நிலம் தானமாகக் கொடுத்துள்ளார் என்பது கல்வெட்டொன்றால் தெரிய வருகிறது. ஆசிரியர் என்ற முறையில் தமக்குக் கிடைத்த நிலத்தைத் தானம் கொடுத்துள்ளார். தானம் கொடுத்த ஆண்டு கி. பி. 1275 என்பது கல்வெட்டால் புலனுகிறது. 'எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகர பாண்டியன்' காலத்தைச் சேர்ந்தவர் சேனுவரையர்.

'ஆற்றூர்ச் சேனுவரையர்' என்று இக்கல்வெட்டு குறிப்பிடுவதால் சேனுவரையர் ஆத்தூரைச் சொந்த ஊராகக் கொண்டவர் என்பது தெளிவு.

சேனுவரையர் ஆத்தூரைச் சேர்ந்தவர். அவர் எழுதிய உரையிலும் தகுந்த சான்றுகள் உள்ளன.

''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி''

என்ற தொல்காப்பிய சூத்திரத்திற்கு உரை எழுதும்போது தென்பாண்டிய நாட்டின் வழக்கினை மட்டும் குறிப்பிடுகிறார். பிற பன்னிரு நாட்டு வழக்கினைக் குறிப்பிடவில்லை. எனவே இவர் தென்பாண்டிய நாட்டினைச் சேர்ந்தவர் என்பது அறிய வருகிறது.

தொல்காப்பிய 164ஆம் சூத்திரத்திற்கு உரை எழுதும்போது "புறத்துப்போய் விளையாடும் பேதைப்பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண் மகனென்று வழங்குப" என்று மாறோக்கத்து வழக்கினை மட்டும் குறிப்பிடுகிறார். மாறோக்கம் என்பது கொற்கை, மாறமங்கலம். ஆத்தூர் ஆகிய ஊர்கள் சேர்ந்த பகுதி எனவே, தென்பாண்டி நாட்டு மாறோக்கம் என்னும் பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் உறுதியாகிறது. இம் மாறோக் கத்தைச் சேர்ந்தவர்தாம் சங்ககாலப் பெண் புலவரான மாறோக் கத்து நப்பசலையார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான கைநிலை பாடிய மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார் என்பவரும் இப் பகுதியைச் சேர்ந்தவரே. மனைவியைப் பெண்டாட்டி என்று அழைக்கும் வழக்கு இன்றும் இப் பகுதியில் உள்ளது. இதனையும் சேனாவரையர் குறிப்பிட்டுள்ளார். எறும்பு முட்டைகளைத் தூக்கிக்கொண்டு திண்ணை வழியாக வரிசை யாகச் சென்றால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை இப் பகுதியில் இன்றும் உண்டு. இதனையும் சேனாவரையர் குறிப்பிட்டுள்ளார். இச் சான்றுகளால் மாறோக்கம் பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது. ஆற்றூர்ச் சேனாவரையர் என்று கல்வெட்டு குறிப்பிடுவதால் மாறோக்க மண்டிலத்தைச் சேர்ந்த ஆற்றூர் இவரது சொந்த ஊர் என்று தெளியலாம். ஆற்றூர் இன்று ஆத்தூர் என அழைக்கப்படுகிறது.

அரசப் பிரதிநிதிகள் :

சோமநாதர் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் கீழ்க் கண்டவர்களுடையன.

1. பாண்டியன் சீமாறன் சீவல்லபன்.
2. மாறவர்மன் குலசேகர பாண்டியன்.
3. சடையன்மாறன்.
4. மாறவர்மன் விக்கிரம சோழ பாண்டியர்.
5. ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியர்.

இவருள் முதல் மூன்று பேரும் பாண்டிய மன்னர்கள். கடைசி இருவரும் பாண்டிய நாட்டை ஆண்ட சோழ நாட்டுப் பிரதி நிதிகள். முதலாம் இராசேந்திர சோழன் பாண்டிய நாட்டை வென்று அடிமைப்படுத்திய பிறகு பாண்டிய நாட்டு நிர்வாகங்களைக் கவனிப்பதற்கு அரசப் பிரதிநிதியை நியமித்தான். அரசப் பிரதிநிதி யாக நியமிக்கப்பட்டவர்கள், சோழ இளவரசர்களே. இவர்கள்

''சோழபாண்டியன்'' என்ற பட்டப் பெயரைச் சூடிக்கொண்டு பாண்டிய நாட்டு நிர்வாகத்தைக் கவனித்தனர். பாண்டியர்கள் சூடிக் கொள்ளும் சடையவர்மன், மாறவர்மன் என்னும் பட்டங்களையும் சூடிக்கொண்டனர். சடையவர்மன் சுந்தர சோழபாண்டியன் முதல் இராசேந்திர சோழனின் மகன். இதனைத் திருவாலங்காட்டுச் செப் பேடும் குறிப்பிடுகிறது. இவனே பிற்காலத்தில் முதலாம் இராசாதி ராசன் என்று அழைக்கப்பட்ட மன்னன்.

ஊர்ப்பிரிவு :

ஆத்தூர் குடநாடு என்னும் பிரிவுக்குள் அடங்கியிருந்தது. சீமாறன் சீவல்லபன் காலத்திலிருந்து (கி. பி. 835) இப் பிரிவி லேயே அடங்கியிருந்தது என்று அறிகிறோம். குடநாட்டுப் பிரம தேயம் ஆற்றூர் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சோழர்கள் ஆட்சிக் காலத்தில் ஆத்தூருக்குச் சேந்தமங்கலம் என்ற பெயரும் இருந்தது. ஆற்றூர் சேந்தமங்கலத்து ஸ்ரீசோம நாதர் என்று இவ் வூர் இறைவன் சுந்தர சோழபாண்டியன் கல் வெட்டில் குறிக்கப்படுகிறார். தென் திருப்பூவணம் உடையார் என்றும் சோமநாதர் அழைக்கப்பட்டார் என்பது சோழ அரசப் பிரதிநிதிகள் கல்வெட்டால் தெரிய வருகிறது. சடங்கலிகுறிச்சி என்ற ஊருக்கு வடக்கே ஆத்தூர் அமைந்திருந்ததாகச் சடையன் மாறன் கல்வெட்டு உணர்த்துகின்றது. ''அவணிபசேகரமங்கலம்'' என்ற பழம் பெயரும் ஆத்தூருக்கு உண்டு. பாண்டியன் சீமாறன் சீவல்லபன் அவனிபசேகரன் என்ற பட்டப்பெயரால் அழைக்கப் பட்டான்.

அவன் பெயராலேயே ஆத்தூர் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் அவணிபசேகரமங்கலம் என்று அழைக்கப்பட்டதாகக் கல்வெட்டால் உணர்கின்றோம். திருச்செந்தூர்க் கல்வெட்டும் ஆத்தூரை அவணிபசேகரமங்கலம் என்று குறிப்பிட்டுள்ளது.

தானங்கள் :

சோமநாதர் ஆலயத்திற்குப் பலர் பல்வேறு தானங்களை வழங்கியுள்ளனர். அதிகாரிகள், படைவீரர், அந்தணர், வேளாளர், பெண்கள் ஆகியோர், விளக்கு எரிப்பதற்காகவும் அந்தணர்களுக்கு உணவு அளிப்பதற்காகவும், கூத்தாடுவதற்காகவும் தானங்கள் வழங்கியுள்ளனர் என்பது இக் கோயில் கல்வெட்டுக்களால் தெளி வாகத் தெரிய வருகிறது.

பாண்டியன் சீமாறன் சீவல்லபன் ஆட்சிக் காலத்தில், கி. பி. 837-ஆம் ஆண்டில் முள்ளிநாட்டு ராஜ ராஜசதுர்வேதி மங்க

லத்துச் சாரங்கபாணி திருநீலகண்டன் என்பவனின் மனைவி "ஆண்டமைச்சாணி" என்பவள் ஆத்தூர்க் கோயிலுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு உணவு வழங்குவதற்காகத் தானம் கொடுத்துள்ளாள். மாறவர்மன் விக்கிரம சோழ பாண்டியன் காலத்தில் நிருப சிகாமணி மூவேந்த வேளான் என்னும் அதிகாரி 15 சிவபிராமணர்களுக்குப் பால் கொடுப்பதற்காகப் பணம் தானம் வழங்கியுள்ளான். சோழ மண்டலத்துச் சத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு மாதேவி மங்கலத்தைச் சேர்ந்த திருமூர்த்தி என்பவன் சங்குமுக நீராடிவிட்டு 10 பிராமணர்களுக்கு அமாவாசை நாட்களில் உணவு வழங்க 65 கலம் நெல் தானம் அளித்துள்ளான்.

ஆத்தூரைச் சேர்ந்த வெள்ளாளன் தச்சன் திருநுந்தா விளக்கு எரிப்பதற்காக இரண்டு எருமைகளைத் தானம் வழங்கியுள்ளான். "சுந்தரசோழத் தெரிந்த பழையவாள்" என்னும் படைப் பிரிவைச் சேர்ந்த பாண்டன் கட்டங்கன் என்னும் வரன் விளக்கெரிக்க ஆகும் செலவுக்காக 50 ஆடுகளைக் கொடுத்துள்ளான். மருகால் நாட்டுக் கருப்பூர் கருப்பூருடையான் விளக்கு எரிப்பதற்காக நெல் தானம் வழங்கியுள்ளான். பாரத்வாஜன் உலோகாதித்தன் திருக்கானப்பேர் நாட்டு மூவேந்தர் வேளான், குளத்தூர் விக்கிரமா முகபல்லவரையன், பூவநிதி ஆகியோரும் தானம் வழங்கியுள்ளனர்.

நாடகசாலை :

ஆத்தூர்க் கோயிலுக்குள் 'அழகிய பாண்டியன் கூடம்' என்னும் நாடகசாலை இருந்ததாக சீமாறன் சீவல்லபன் கல்வெட்டொன்று உணர்த்துகின்றது. ஆவணித் திருநாளில் இந் நாடக சாலையில் கூத்தும், 'திருநாடகம்' என்னும் நாடகமும் நடத்தப்பெற்றது. இது மத சம்பந்தமான நாடகமாகும். சாந்திக்கூத்தன் என்பான் கூத்தை ஆடினன். 'திருமேனி பிரியதான்' என்னும் நாடக ஆசிரியனுக்கு இரண்டு மாநிலம் "குன்றுமொழி சிங்கப்பிரான் ஆன குருகுலுத்தரையன்" என்பவனல் தானமாகக் கொடுக்கப்பட்டது என்றும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இத் தானம் அளிக்கப்பட்ட ஆண்டு கி. பி. 851.

நிறைவு :

இவ்வாறு ஆத்தூர்க் கல்வெட்டுக்கள் அரிய செய்திகள் பலவற்றைத் தாங்கி நிற்கின்றன. தென்னக வரலாற்றின் இருண்ட பகுதிகள் தெளிவாக வேண்டுமானல் கல்வெட்டுக்கள் நுண்மையாக ஆராயப்பட வேண்டும். தென்பாண்டி நாட்டுக் கோயில்கள் பலவற்றில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுக்கள் பல நிறைந்துள்ளன. இவை பாதுகாக்கப்பட வேண்டும்.

———

பெரியார் என்னும் பேரொளி*

[புலவர் நெல்லை ஆ. கணபதி]

"விடுதலைப் போரிலும் வீரராய் உழைத்துக்
கெடுதலைத் தாங்கினர்; கிடைத்தது விடுதலை!
வார்த்தையில் மட்டும் வருவதா சுதந்திரம்?
ஆர்த்தெழுந் தார்! உடன் அறிஞர் அண் ணவும்
தந்தையின் படையில் தளபதி ஆயினர்!
சிந்தைதான் தூண்டிடச் செய்திடும் வண்ணமே
தந்தையின் கருத்தினைத் தனயனும் விளக்கினர்!

விந்தைபோல் இளைஞர் விரும்பிடும் வகையினில்
அழகிய தமிழினில் அடுக்கு மொழியினில்
பழகிய மூடப் பழக்கமோய்ந் திடவே
பெரியார் பாதையில் பெரும்பணி செய்தார்!
சிறியோர் திரண்டனர்; செந்தமிழ் இளைஞர்
சாதிப் பேய்களோர் சாக்கடை என்பதை
ஓதி யுணர்ந்தனர்; பிறர்க்கும் உரைத்தனர்;
ஆருயிர்த் தோழியே! அதன்பய னகவே
ஓருயிர் ஈருடல் ஒன்றிய காதலர்
சாதியும் மதமுமே தாண்டி மணந்தனர்;
நீதித் துறையதை நேர்மைதான் என்றது!

தாழ்த்தப் பட்டவர் சாதியின் பெயரால்
வீழ்த்தப் பட்டவர் வேலையும் படிப்பும்
சட்ட பூர்வமாய்ச் சலுகைபெற் றடைந்தனர்!
தட்டெழுத் துக்கும் தகுந்ததோர் வகையினில்
இனிய தமிழ்மொழி எழுத்துசீர் திருத்தமும்
கனிந்தது! மகளிர் கல்வியும் வளர்ந்தது!
வேர்ப்பலா போன்றநம் விதவைகள் மறுமணம்
ஊர்ப்புறம் நடந்தன! உரிமையும் பதவியும்
ஆண்பெண் இருவரும் அடைந்திடச் சமமெனும்
தேனிசை எட்டுத் திசையிலும் நிறைந்தது!
தெரிவாய் தோழி! செய்ததோ...
பெரியார் என்னும் பேரொளி தானே!"

---

*இப் பாடற்பகுதி இவ்வாசிரியர் இயற்றிய "பெரியாராற்றுப் படை" யினின்றும் எடுக்கப்பட்டது.

இலக்கியத்தில் அறிவியல்

[திரு. ந. முருகன், இ. அ., மு. க.]

முன்னுரை :

'உயர்ந்த சிந்தனைகளின் சிறந்த படைப்பே இலக்கியம்.'[1] இலக்கியம் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு; வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் காலக் கண்ணுடி; காட்சிகளைக் கற்பனைச் சிறப்போடும் கவின்மிகு வனப்போடும் பொற்புறப் படைக்கும் சிந்தனைப் பெட்டகம்; அரசியல் அமைப்புமுறை, நீதி நெறி முறை, சமுதாயப் பழக்க வழக்கம், அறிவியல் போன்ற பல்வேறு கருத்துக்களைப் பாங்குடன் பகரும் பல்கலைக் களஞ்சியம்.

அணுக் கொள்கை :

பதினெட்டாம் நூற்றுண்டில் அணுக்கொள்கை வகுத்த அறிவியல் அறிஞர் டால்டன் அணுவைப் பிளக்க முடியாது என்று கூறினர். பத்தொன்பதாம் நூற்றுண்டில் அறிஞர் ரூதர்போர்டு (Rutherford) அணுவைப் பிளக்கலாம் என்று சொல்லி, அதன் பகுதிப் பொருள்களையும் (Constituents) விளக்கினர். இவ்விருவருக்கும் முன்னரே ஒண்டமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார் அணுவைப் பிளக்கமுடியும் என்று தொலைநோக்கோடு கூறியிருப்பதை,

> ''அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்''[2]

என்ற பாடல் நன்கு எடுத்துக் காட்டும். அதன்பின் பன்னிரண்டாம் நூற்றுண்டில் கவிச் சக்கரவர்த்தி கம்பர் தம் அணுக் கொள்கையை,

> ''சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
> கோணினும் உளன்''[3]

என்ற பாடல் மூலம் நன்கறியலாம். அப் பாடல்(1) அணு ஒரே தன்மையை உடையது (ஒரு தன்மை அணு) (2) அணுவைப்

---

1. 'Literature is a record of best thoughts'—Emerson.
2. திருவள்ளுவமாலை, பாடல் 2 —ஔவையார்.
3. கம்பராமாயணம், யுத்த காண்டம், பாடல் 267.

பிளக்க முடியும் (கூறிட்டு) (3) கரு(Nucleus) அதன் அணுவின் அளவில் நூறில் ஒரு பங்கு (சதகூறிட்ட கோண்) போன்ற அறிவியல் உண்மைகளை உணர்த்துகின்றது. அறிவியல் அறிஞர் ரூதர்போர்டு மொழியும் 'அணுக்கரு'தான் கம்பர் கூறும் 'கோண்' என்ற சொல்லைக் குறிக்கும் எனலாம். அணு, கோண் ஆகிய இரு சொற்களும் தமிழில் மிகச் சிறிய எண்களைக் குறிக்கின்றன. இருந் தாலும் அணு என்ற சொல்லை எப்படி ஒரு மூலகத்தின் பிரிக்க வியலா மிகச் சிறிய பகுதியினைக் குறிப்பதற்கு அறிவியல் அறிஞர் பயன்படுத்துகின்றாரோ, அதுபோலக் கோண் என்ற சொல்லும் அணுவைப் பிளந்த பின் கிடைக்கும் அணுக் கருவினைச் (Nucleus of the atom) சுட்டும் எனலாம். அறிவியல் வளர்ச்சி மிகுந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர் ரூதர்போர்டு, 'கருவின் அளவு அதன் அணுவின் அளவில் பதினாயிரத்தில் ஒரு பங்கு'[4] என்று சொல்லுவதையே, பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி நூறில் ஒருபங்கு என்று சொன்னார். இத்தகைய அணுக் கொள்கையைப் பன்னிரண்டாம் நூற்றாண்டி லேயே உய்த்துணர்ந்து உணர்த்திய அருந்தமிழ்க் கவிஞரை 'அணுவியல் அறிஞர்' என்றே சொல்லலாம்!

மருத்துவம் :

மருத்துவக் கலையில் தமிழர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர் என்பதைப் பண்டைத் தமிழ் இலக்கியம் பறைசாற்றும். உடலில் ஒரு கட்டி ஏற்பட்டால் அதனை எவ்விதம் குணப்படுத்துவது என்பதற்கு அருமையானதொரு மருத்துவம் மொழிகின்றார் மருத் துவ மேதை கம்பர் :

"உடலிடைத் தோன்றிற் றொன்றை யறுத்து அதன்
உதிரம் ஊற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரந் தீர்வர்."[5]

உடலில் ஏற்பட்ட கட்டியின் நச்சு நீர் பரவி உடல் முழுவதையும் கெடுத்துவிடாதபடி அதனை அறுத்து, அதிலுள்ள கெட்ட இரத்தத்தை வடியச் செய்து, அஃது இருந்த இடம் நீங்கும்படி சூட்டுக் கோலால் சுட வேண்டும். அக் கட்டியின் நச்சுத்

---

4. "The atomic nucleus which is about one ten-thousandth the sizes of the atom" —Rutherford, Encyclopaedia Britannica p. 647.

5. கம்பராமாயணம், யுத்தகாண்டம், பாடல் 73.

தன்மையை நீக்க வேருெரு மருந்தினையும் இட்டுத் துன்பம் போக்குவர் அறிவுடையோர் என்கின்ருர் கவிச்சக்கரவர்த்தி. இதே முறையைத்தான் (சூட்டுக்கோலால் சுடுவது தவிர) இன்றைய மருத்துவர்(Doctor) களும் செய்கின்றனர். கம்பர் 'வேருேர் மருந்து' என்று எடுத்துரைப்பது சிந்தனைக்குரியது. உரையாசிரியர்கள், அவர்கள் காலத்திற்கேற்ப அதற்குக் 'காரமருந்து' என்று பொருள் கூறியுள்ளனர். ஆனுல் இன்றைய அறிவியல் நோக்கில், நாம் அதனைத் தடுப்பு மருந்து (Antibiotic Medicine) என்று நவிலலாம். மருத்துவர்கள் கட்டிகளைக் கத்தியால் கீறிவிட்டு, பென்சிலின், டெராமைசின் போன்ற தடுப்பு மருந்துகளை அளிக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு காலத்தவரும் அவரவர் காலத்திற் பயன்படும் மருந்தைக் குறிக்கும் வகையில் 'வேருேர் மருந்து' எனக் கூறிய கம்பர் ஒரு சிறந்த மருத்துவ மேதையாகவே விளங்குகின்ருர்.

கணிதம் :

தமிழர்கள் கணித இயலிலும் கைதேர்ந்து விளங்கினர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் இனிது இயம்புகின்றன. ஆங்கில மொழியில் 'கால்(Quarter-$\frac{1}{4}$)' என்ற எண்ணைவிடச் சிறிய எண்ணைக் குறிக்கும் சொல் இருப்பதாகச் சொல்லப்படவில்லை. ஆனுல், தமிழில் அதனைவிட மிகச் சிறிய எண்களைக் குறிக்கும் சொற்கள் உள்ளன. சான்ருக $\frac{1}{8}$ என்பதை அரைக்கால் என்றும் $\frac{1}{16}$ என்பதை மாகாணி என்றும் வழங்குகின்ருேம்.

''முந்திரி மேற்காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனுய் எண்ணி விடும்''[6]

என்னும் நாலடிப் பாடலில் உள்ள 'முந்திரி', 'காணி' என்ற இரு சொற்களும் எண்ணுப் பெயர்களே. இதில் 'முந்திரி', என்ற சொல் 'காணி' என்பதைவிடச் சிறிய எண்ணைக் குறிக்கும் (முந்திரி—$\frac{1}{320}$ = .003125). அதைவிடச் சற்றுப் பெரிய எண்தான் 'காணி($\frac{1}{80}$ = ·0125)' என்பது. தமிழில் மிக மிகச் சிறிய எண்ணைக் குறிக்கும் சொல் 'கோண்'[7] என்பதாகும். அது $\frac{1}{1.075.20.00.000}$ எனும் எண்ணைக் குறிக்கின்றது.[8]

---

6. நாலடியார், பாடல் 346.

7. கம்பராமாயணம், யுத்தகாண்டம் பாடல் 267.

8. தினமணி—உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், பக். 30.

இவ்வாறு மிகச் சிறிய எண்ணிற்கும் பெயரிட்டு வழங்கிய தமிழர் மிகப் பெரிய எண்ணிற்கும் பெயரிடத் தவறவில்லை. ஆங்கில மொழியில் மிகப் பெரிய எண்ணைக் குறிக்க 'பில்லியன்' (Billion) என்ற சொல்லே வழங்குவதாகக் கூறப்படுகின்றது. அது தமிழ் முறைப்படி பத்து கோடிக்குச் சமம். அதனைவிட மிகப் பெரிய எண்ணைக் குறிக்கும் சொல் தமிழில் உள்ளது. இதனை,

''பதுமம் என்னும் ஒரு பேரெண்''[9]

என்ற தொல்காப்பியத் தொடர் வலியுறுத்தும். 'பதுமம்' என்ற சொல்லிற்குத் தாமரை என்று பொருள். தாமரை என்னும் சொல் கோடியின் வர்க்க எண்ணை (கோடி $\times$ கோடி $=$ கோடி^{2})க் குறிக்கும். நமது நடுவணரசு, பல்வேறு துறைகளிற் சிறந்து விளங்கு பவருக்குப், 'பத்மஸ்ரீ' என்னும் பட்டத்தை வழங்கியது. 'பத்மஸ்ரீ' எனும் வடசொல் 'தாமரைத் திரு' என்னும் தமிழ்ச் சொல்லைக் குறிக்கின்றது. இப் பட்டம் பெற்றவர் பொருட் செல்வத்தோடு, கோடி கோடி அளவுப் பெருமைகளையும் உடையவர் என்பதை நாம் நன்கறியலாம். பெரும் பேரெண்ணிற்குப் 'பரார்த்தம்' என்று பெயரிட்டுள்ளனர் பண்டைச் சான்றோர். அது 1,000,00,00,000,00,00,000 எனும் எண்ணைக் குறிக்கின்றது.[10] இவற்றிலிருந்து கணிதத்தில் நம் முன்னோர் மிகச் சிற்றெண் ணிற்கும், பெரும் பேரெண்ணிற்கும் பெயரிட்டு அழைக்கும் நுண்ணறிவு படைத்தவர் என்பது தெள்ளெனத் தெரிகின்றது.

முடிவுரை :

தமிழ் இலக்கியக் கடலில் ஈண்டு எடுத்து விளக்கியன சில முத்துக்கள் தாம். இன்னும் எத்தனையோ உள்ளன. பண்டை இலக்கியங்களை இன்றைய இளைஞர்கள் நன்கு ஆய்தல் வேண்டும். அவ்விலக்கியங்களில் பொதிந்துள்ள அறிவியல் நுணுக்கங்களைத் தெரிந்து, அவற்றை இன்றைய அறிவியல் வளர்ச்சியோடு ஒப்பிட வேண்டும். மேலும் புதிய பல சிந்தனைகளைச் செலுத்திப் பல அறிவியல் கொள்கைகளையும், சாதனங்களையும் உருவாக்கினல் அதுவே தமிழன்னைக்குச் செய்யும் தனிப் பெருந் தொண்டாகும்.

---

9. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா 393 உரை.

10. தினமணி - உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், பக். 30.

இனிமையைத் தமிழே காட்டும்!

[வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.]

மனநிலை முகமே காட்டும்;
மழைநிலை பயிரே காட்டும்;
குணநிலை நடையே காட்டும்;
குலமதை மொழியே காட்டும்!

செல்வத்தைக் கொடையே காட்டும்;
செழிப்பினை நிலமே காட்டும்;
கல்வியை அடக்கம் காட்டும்;
காதலைக் கண்கள் காட்டும்!

வீரத்தைக் களமே காட்டும்;
வெற்றியை வினைகள் காட்டும்;
சோரத்தை ஒழுக்கக் கேட்டைச்
சூழ்ந்திடும் நோய்கள் காட்டும்!

ஆடவர் மகளிர் பேதம்
அமைந்துள நாணம் காட்டும்;
ஏடவர் அறியார் பேதம்
ஏற்றிடும் சபையே காட்டும்!

இளமையை எழுச்சி காட்டும்;
இனிமையைத் தமிழே காட்டும்;
இளப்பமாய் நினைப்போர் தம்மை
ஏளனச் சிரிப்பே காட்டும்!

———

பாராட்டி மகிழ்கிறோம்

மொழி ஞாயிறு உயர்திரு தேவநேயப்பாவாணர் அவர்கள் எழுதிய 'தமிழிலக்கிய வரலாறு' என்னும் அரிய நூலினைப் பதிப்பிக்க, சிங்கப்பூர் வணிகக் கல்விச் சாலையின் உரிமையாளரும், முதல்வருமான திரு வெ. கோபால கிருட்டிணனார் (AAIA., ACBI., D.P. Acctg.) அவர்கள், உருபா 5000 பொருளுதவி செய்துள்ளார்கள். தமிழ்ப்பணிக்கு உதவிசெய்ய முன்வந்த திரு கோபாலகிருட்டிணனார் தம் பரந்த உளப்பாங்கினையும் தமிழ் மொழிப் பற்றினையும் பாராட்டி மகிழ்கிறோம்.

பெருந்தகை ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் பெரும் பிரிவு

புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குநரும், படப்பிடிப்பு நிலைய (Studio) உரிமையாளரும், அறப்பணிகள் பலவற்றைச் செய்த பெருந்தகையாளருமான ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரவர்கள், தமது 72 ஆவது அகவையில் சென்னையில் காலமானுர்கள் என்ற செய்தியறிந்து வருந்துகின்ருேம்.



1907 ஆம் ஆண்டில் காரைக்குடியில் தோன்றிய திரு செட்டியாரவர்கள் 1940 இல் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டார். 1947 இல் காரைக்குடியில் படப்பிடிப்பு நிலயமொன்றை நிறுவினுர். பின்னர் அந் நிலயம் சென்னைக்கு மாற்றப்பட்டது. அஃதே இன்று ஏ. வி. எம். காட்சிப் படமெடுக்கும் புகழ்பெற்ற நிலயமாகத் திகழ்கின்றது. புராண, இதிகாச, சமுதாயப் படங்களாக நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்களை இவர் தயாரித்துள்ளார். தமிழில் மட்டுமன்றி இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் படங்களைத் தயாரித்துப் புகழ்பெற்ருர். 1957 இல் இவர் தயாரித்த குழந்தைகள் படமொன்று சவகர்லால் நேரு அவர்களின் தங்கப்பதக்கப் பரிசினைப் பெற்றது. இவர் திரைப்படத் தொழில் ஆய்வுக் குழுவில் ஓர் உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

இவை அனைத்துக்கும் மேலாக இவர் ஒருசிறந்த அறச் செல்வராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. நம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திடமும், கழக ஆட்சியாளரிடமும் பற்றும் தொடர்பும் கொண்டிருந்ததோடு, அவ்வப்போது கழகம் நடத்திய திருவள்ளுவர் பெருவிழா, கழகப் பொன்விழா, கழக ஆட்சியாளர் பவளவிழா, மறைமலையடிகள் நூற்றுண்டுவிழா, செந்தமிழ்ச்செல்வி பொன்விழா ஆகிய ஐந்து பெருவிழாக்களுக்குத் தம்முடைய இராசேசுவரி திருமண மண்டபத்தை இலவசமாகக் கொடுத்துதவியமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இவர் பெயரில் சென்னையில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், பல அறநிலையங்களும் நடைபெற்று வருகின்றன.

மறைந்த இப் பெருந்தகையாளரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம். இவர்தம் இன்னுயிர் இறையடியில் இன்புறுவதாக.

கோமகன் மவுண்ட் பேட்டன் மறைவு

இந்தியாவின் முன்னுள் துணையரையரும் (Vice Roy), விக்டோரியா பேரரசியின் பெயரரும், இற்றை நாள் இங்கிலாந்து அரசி இரண்டாவது எலிசபெத்தின் தொலை உறவினரும், ஆங்கிலேய அரச பரம்பரையில் வந்தவருமான மவுண்ட் பேட்டன் கோமகனுர் ஆகஸ்ட்டுத் திங்கள் 27 ஆம் நாள், முல்க்கமோர் என்னுமிடத்தில் தம் நண்பர்களுடன் படகில் சென்றுகொண்டிருந்தபோது ஒரு வெடிப்பேரிடருக்கு இலக்காகித் தமது 82ஆம் அகவையில் காலமானுர் என்ற செய்தியறிந்து வருந்துகின்ருேம்.



இந்தியாவில் கடைசித் துணையரையர் பதவியிலிருந்தவர் மவுண்ட்பேட்டன் கோமகனுவார். ஆங்கில ஆட்சியினின்று 1947இல் இந்தியா விடுதலை பெற்ற காலை அந்த ஆட்சி மாற்றத்தை இந்தியர் கைக்கு வழங்கிய பெருமை இந்தப் பெருமகனுர்க்கே உரியதாகும். இவர்தம் ஆட்சிக் காலத்தில் இந்தியத் தலைவர்களுடன் நட்புறவோடு பழகினுர். இதனுல் அவர் இந்தியாவின் உண்மையான நண்பர் என்று பாராட்டப் பெற்ருர்.

ஆங்கிலேயரிடம் பகைமைகொண்ட அயர்லாந்து பிரிவினைவாதிகள் சிலர் திரு. மவுண்ட்பேட்டன் அவர்களைக் கொல்லக் கருதி அவர் சென்ற படகில் வெடிவைத்து அவரைக் கொன்றனர். இச் செய்தி இந்தியாவுக்கு விடுதலை தேடித்தந்த காந்தியடிகள் வஞ்சகனெருவனுல் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியோடு ஒப்பிட்டுக் காணத்தக்கது. இந்தியாவுக்கு விடுதலை தேடித்தந்தவரும் கொல்லப்பட்டார். விடுதலையை வழங்கியவரும் கொல்லப்பட்டார் !

மவுண்ட் பேட்டன் கோமகனுர் பிரிவுக்கு இரங்கல் தெரிவிக்குமுகத்தான் இந்திய அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஒருநாள் மூடப்பட்டன. நாட்டுக் கொடிகள் தலை தாழ்த்தித் துயரத்தின் சின்னமாக ஒரு கிழமைவரை திகழ்ந்தன. 4—9—79இல் லண்டனில் நடைபெற்ற அக் கோமகனுர் இறுதிச் சடங்கில் இந்தியாவின் சார்பில் துணைக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு இதயத்துல்லா அவர்கள் கலந்துகொண்டார். மறைந்த கோமகனுர் குடும்பத்தார்க்கும் ஆங்கில அரசினர்க்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

*காந்தியடிகள் மறைவு குறித்து மவுண்ட்பேட்டன் பெருமகனுர் வெளியிட்ட கருத்து

"இந்தியா—ஏன், உலகமே அவரைப்போல் இன்னெருவரை இன்னும் பல நூற்ருண்டுகளுக்குக் காணப்போவதில்லே. மக்களிடம் அன்பு, பொறுமை, உண்மை, இவற்றையே கொண்ட அவரது வாழ்க்கை நம் இடர்ப்படும் உலகிற்கு இச் சமயத்தில் நம் ஈடற்ற ஏக்கத்திற்கு ஓர் ஆறுதலாகும்."

சொ. ர. தேமொழியாருக்கு வரவேற்பு

நம் சைவசித்தாந்தக் கருத்துக்களை நூல்வடிவில் பரப்ப' அமெரிக்க, சிராகசு பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று 13—6—79 அன்று சென்ற, சைதைத் தமிழ் சங்கத் தலைவரும், அருள் ஞானப்பெரு வெளியினை நிறுவியவருமான வாழ்வியற் புலவர், சொ. ர. தேமொழியார், 14—9—79 இரவு 8-35 மணிக்குச் சென்னை, மீனம்பாக்கம் விண்ணூர்தி நிலயம் வந்தடைவார். பல அமைப்புக்களாலும் அறுஞர்களாலும் கீழ்க்கண்டவாறு வரவேற்பளிக்கப்படும்.



14—9—'79 இரவு 8-35 மணிக்கு மீனம்பாக்கம் விண்ணூர்தி நிலயத்தில்.

16—9—79 மாலே 6 மணிக்கு, சைதை காரணீசுவரர் திருக்கோயிலில். சைதைத் தமிழ்சங்கம் திரு. த. பாலசுந்தரம் (அறங்காவலர்) தலைமையில்; முன்னுள் நடுவர் என். கிருட்டிணசாமி ரெட்டியார், க. முத்துலிங்க ரெட்டியார், திருக்கோயில் ஆசிரியர், ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஒ.எல் மற்றும் பலர் பாராட்டுவர்.

17—9—79 மாலே 5 மணிக்கு அருள்ஞானப் பெருவெளி, நடராசபுரம், புக்கத்துறை, மதுராந்தக வட்டம்.

அறச்சுடர் க. முத்துலிங்க ரெட்டியார் தலைமையில் டாக்டர். பி. கே. சுந்தரம், எம்.ஏ., பி.எச்.டி. டாக்டர். வி. இரத்தின சபாபதி, பி.ஓ.எல்., எம்.ஏ., பி.எச்.டி., சபாரத்தினம், எம்.ஏ., மற்றும் பலர் பாராட்டுவார்கள்.

20—9—'79 [சச்சிதானந்த சபை, குருக்ஷேத்திரம், தாம்பரம்.

---

*1948இல் காந்தியடிகள் மறைவு குறித்துக் கழகம் வெளியிட்ட உரிமையின் பரிசு' என்னும் தொகுப்பு நூலினின்று எடுக்கப்பட்டது

செய்திகளும் குறிப்புக்களும்

அரியலூர் மணிவாசக மன்றத்தின் 35 ஆவது ஆண்டு விழா

1—9—79 இல், அரியலூர் மணிவாசக மன்றத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழா, ஆவணி மூலப் பெருநாளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருக்குறளார் திரு. வீ. முனுசாமி, பி.ஏ., பி.எல். அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினர். புலவர் சா. சிவப்பிரகாசம் பிள்ளை விழாவைத் தொடங்கி வைத்தார். விழாத் தலைவர் விழா மலரினைத் திரு. சி. கிருட்டிணசாமிப் பிள்ளையவர்களிடம் வழங்கினர். வித்துவான் சு. சொர்ண காளீச்சுரர், டி. பி. சண்முகம் ஆகியோர் உரையாற்றினர். திரு. ஏ. சோமசுந்தரம் பிள்ளை நன்றிநவில விழா இனிது முடிந்தது.

முதுபெரும் புலவர், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் 84 ஆவது பிறந்த நாள் விழா

முதுபெரும் புலவரும், புரசைச் சுந்தரர் தமிழ்க் கல்லூரி முதல்வரும், இலக்கணத் தாத்தா எனப் போற்றப் பெறுபவரும், தமிழகப் புலவர்குழுத் தலைமைப் புலவருமான மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் 84 ஆவது பிறந்த நாள் விழா 31—8—79 இல், புரசை கங்காதிசுவரர் கோயில் தெருவிலுள்ள நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் மாலை 6 மணியளவில் பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. வித்துவான் கா. வ. சச்சிதானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினர். 'திருக்கோயில்' ஆசிரியர் ந. ரா. முருகவேள், எம். ஓ. எல். அவர்கள் பாராட்டுரை வழங்கினர். வித்துவான் அ. சங்கர் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

தமிழக ஈழப் பண்பாட்டு மன்றத் தீர்மானம்

கோவையில் உள்ள தமிழக ஈழப் பண்பாட்டு மன்றத்தின் சார்பில் ஈழத் தமிழர் இன ஒடுக்கல் நினைவுநாள் பொதுக்கூட்டம் 17—8—79 இல் நடைபெற்றது. திரு. கு. குமாரசாமி தலைமை தாங்கினர். இலங்கையில் தமிழ்ப் பகுதியில் மட்டும் நெருக்கடி நிலை நீடிப்பதை நீக்க வேண்டுமென்றும், தமிழ் இளைஞர்களைத் துன்புறுத்துவதை நிறுத்தவேண்டுமென்றும், சிங்களவர்க்கும் தமிழர்க்கும் சமஉரிமை வழங்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, சென்னை

சென்னை திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி தமிழ்ப் புலவர் படிப்புக்கு (B.Lit) இலவச வகுப்புக்களை இவ்யாண்டும் 20—7—79 முதல் பவழக்காரத்தெரு ஏ.ஆர்.சி. மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடத்துகின்றது. நாள்தோறும் மாலை 6-45 மணி முதல் 7-45 மணிவரை நடைபெறும், இந்த வகுப்புக்களில் பிற மொழியாளர்களுக்கு அடிப்படைத் தமிழ்ப் பயிற்சியும் அளிக்கப்பெறும். தமிழ் முதுகலை வகுப்பும் நடைபெறும் எனக் கல்லூரிச் செயலர் திரு. சிறுவை மோகனசுந்தரம் அறிவிக்கின்றார்.

மூன்று நூல்கள் வெளியீட்டு விழா

திரு. சு. சமுத்திரம் அவர்கள் எழுதிய மூன்று நூல்கள் 25—8—79 இல் சிதம்பரம் மணிவாசகர் நூலகத்தாரால் வெளியிடப்பட்டன. இவ் விழா சென்னை மாவட்ட மைய நூலகத்தில் கவிஞர் கே. சி. எஸ் அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பதிப்பாசிரியர் திரு மெய்யப்பன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இந்து அறநிலைய ஆணையர் யு. சுப்பிரமணியம் நூல்களை வெளியிட்டார். அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். ஆசிரியர் சமுத்திரம் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

மகாகவி பாரதியார் விழா

1979 செப்டம்பர் 11, 12 ஆகிய இரு நாள்களிலும் சென்னையில் மாநகர் நூலகக் கட்டட அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாசு பட்வாரி அவர்களும், செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு இராம வீரப்பன் அவர்களும், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களும் மற்றும் அறிஞர் சிலரும் சிறப்புரை ஆற்றினர்கள். இவ்வாண்டில் 400 மாணவர்கள் பரிசுப் போட்டியில் கலந்துகொண்டுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ௫௩–௬௦௦ ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. P. கிருஷ்ணசாமி எம்.ஏ., திருவனந்தபுரம்	50	00
,, வ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக ஆட்சியாளர்	10	00
,, ப. இராமச்சந்திரன், திருச்சி	10	00
,, ஆ. தி. அ. ஈசுவர், சென்னை	5	00
,, M. P. அப்பாவு பிள்ளை, M.A., L.L.B. திருச்சி	5	00
,, கு. திருமாறன், எம்.ஏ., திருச்சி	10	00
,, S. நாகராசன், C.A., கோவை	5	00
,, அ. கி. மூர்த்தி, தஞ்சாவூர்	25	00
,, ஆ. சுப்பையா பிள்ளை, கழக மேலாளர்	5	00

———

மதிப்புரை

குறள்வழி பிராகிருத இலக்கிய இன்பம்

[ஆசிரியர்: இரா. மதிவாணன்; வெளியீடு: தாய்நாடு பதிப்பகம், 31 புகைவண்டி நிலையப்பாதை, வில்லிவாக்கம், சென்னை-600049; விலை: உருவா 3-50.]

பன்மொழிப் புலவரான இந் நூலாசிரியர், ஏமச்சந்திரர் என்னும் அருக சமயப்புலவர் தமது பாகத (பிராகிருத) இலக்கண நூலில் உரை மேற்கோளாகக் காட்டியுள்ள நடுவணிந்தியப் பாகத இலக்கியப் பாடல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். அன்றியும் அவற்றுக்குப் பொருத்த

மான திருக்குறட் பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் விளக்கமாகத் தம் மொழிபெயர்ப்பை உரைநடையில் அமைத்துள்ளார். தமிழ் மூலம் போலவே அமைந்துள்ள இந் நூல், நூலாசிரியரின் புலமைத்திறத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இலக்கிய ஆர்வலர்கட்கு இந் நூல் ஒரு நல்விருந்து.

கொள்கை வீரன் குமார்

[**ஆசிரியர்:** பாவலர் மேகலை; **வெளியீடு:** சிவலிங்க நூற் பதிப்புக்கழகம், ஈரோடு; **விலை:** உருவா 1-50.]

'நாடகப்புலவர்' எனப் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களால் பாராட்டப் பெற்றவரான பாவலர் மேகலை அவர்களால் புனையப் பட்டுள்ள இந் நாடகம் திருத்தம் பெற்ற இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ளது. மேடை நாடகமான இந் நூல் படிப்பதற்கும் ஏற்புடைய தாக இருப்பது பாராட்டத் தக்கது. நாட்டுக்குத் தேவையான கருத்து, எளிய நடையிலமைந்த உரையாடல்கள் இவை இந் நாடகத்தில் சிறப் பாக அமைந்துள்ளன.

வள்ளுவர் வகுத்த வாழ்வியல்

[**ஆசிரியர்:** ''நலங்கிள்ளி'', வாணன் பதிப்பகம், சுவால்பேட்டை, அரக்கோணம். **விலை:** உரூபா.3]

அறிஞர்கள் திருக்குறட் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் வழி வகைகள் பல. அவற்றுள், எல்லார்க்கும் எளிதில் புரியும் வண்ணம் கதை போலக் குறட்கருத்துக்களை வாழ்வியலோடு பொருத்திச் சொல்லுதல் ஒரு முறை. அதனை இந் நூலசிரியர் அன்பியல், அறவியல், வாழ்வியல், பண்பியல், என நான்கு பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு நயம்பட உரைக்கின்றார். இந் நூலை ஒருமுறை படித்தோர் திருக்குறள் என்றால் என்ன என்பதைப் பிறர்க்கு நன்கெடுத்துக்கூறும் ஆற்றலைப் பெறுவர். ஆசிரியரின் முயற்சி பாராட்டதக்கது.

ஸ்ரீகற்பகாம்பாள் அந்தாதி

[**ஆசிரியர்:** கலைமாமணி சுத்தசத்வானந்தா, 14 சிங்காரநாய்க்கன் தெரு, சென்னை-4. **விலை:** ரூ 1.00]

கடந்த கால்நூற்றாண்டாக வானொலியில் என். எஸ். சிதம்பரம் என்ற பெயரில் இசைப்பாடல்களை எழுதிப் பரப்பி வந்தவர் இந் நூலாசிரியர். மயிலையில் கோயில்கொண்டிருக்கும் அன்னை கற்பகாம்பாள் மீது பாடிய நூறுபாடல்களைக் கொண்டது இந்நூல். அன்னை வழிபாட்டில் ஈடுபாடுகொண்ட அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்க நூல். ஓரளவு தமிழ் தெரிந்த அனைவருமே படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான சொற்களால் இனிமையாகப் புனையப்பெற்றுள்ளது. அன்னையின் அருள் வேண்டுவோர் வாங்கிப் படித்துப் பயன்பெறலாம்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

திருமுறைத் தெளிவே சிவஞானபோதம் —வை. இரத்தினசபாபதி	15	00
பெரியபுராணம் இலக்கியச் சொற்பொழிவு —வித்துவான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர்	10	00
தமிழிலக்கிய வரலாறு —ஞா. தேவநேயப் பாவாணர்	12	50
கீழைக் காற்று (கவிதைகள்)—கவிஞர் கனல்	3	00
கண் சிமிட்டும் கல்லறைகள் ,, —பாப்ரியா	5	00
அக்கரைப் பூக்கள்—இராகுலதாசன்	5	00
பதிப்புக்கலை—அ. விஞயகமூர்த்தி	6	00
கலைவாணர் பற்றித் தமிழறிஞர்கள் —பண்டிதரத்னு என். ஏ. வேலாயுதம்	5	75
சிந்தனைச் செல்வங்கள் —வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை	6	50
மொழிவழிச் சிந்தனைகள் —தவத்திரு குன்றக்குடி அடிகளார்	3	75
கடல்மல்லைக் காதலி—விக்ரமன்	16	00
ராஜகர்ஜனை—கோவி மணிசேகரன்	15	00
நேதாஜியின் வீரப்போர்—ஜெயமணி சுப்ரமணி	9	00
நீதி நூல்கள்—அ. பு. அறவாழி	7	90
திருக்குறளும் திருவாய்மொழியும் —புலவர் செந்துறைமுத்து	4	50
இஸ்லாமிய இலக்கியம்—கா. அப்துல்கபூர், எம்.ஏ.	5	00
நாடகச் சிந்தனைகள்—ஔவை சண்முகம்	4	00
ஒரு சத்தியத்தின் அழுகை—சு. சமுத்திரம்	6	00
உறவுக்கு அப்பால் ,,	5	00
காகித உறவு ,,	5	75
பிறகு—பூமணி	10	00
மீறல் கவிதைகள்—புவியரசு	5	00
சந்தன முல்லை—ப. நெடுமாறன்	5	00
அருவிக்கரை அழகி ,,	6	50
தப்புக்கணக்கு—சிவசங்கரி	6	00
வாதாபி விஜயம்—விக்ரமன்	4	50
அறிவியல் படைத்த அற்புதங்கள்—உமாநாயகன்	4	00
நதியைத் தேடிவந்த கடல்—மகரிஷி	6	00
மனமும் பிரார்த்தனையும்—டாக்டர் உதயமூர்த்தி	5	00
அனுஷா—பி. வி. ஆர்.	10	00
குஞ்சரத்தின் கதை—தென்னரசு	4	50
ஆராய்ச்சி முறையில் ஓர் அறிமுகம் —மு. பொன்னுசாமி, எம். ஏ., எம். எல்.	7	00
A Text-Book of Indian History —Rev. G. U. Pope, M.A., D.D.	135	00
A Hand Book of the Tamil Language —Rev. G. U. Pope, M.A., D.D.	95	00

பதிவு எண் M 4899